கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
NOV 1962

585
4.2

4 அணா

பெற்றோர்களே!

கண்ணன் ஆரம்பித்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. இ
வரையில் தாங்கள் தங்கள் குழந்தையைப் போலவே க
னிடம் அன்பு பாராட்டி, ஆதரித்து வருவதற்கு நன்றி தெரிவி
கொள்கிறோம்.

குழந்தைகள் தங்களுக்கென்று வெளியாகும் எதையும் ஆ
டன் வாங்கிப் படித்து விடுவார்கள். அவற்றில் எவை சிறந்
எவை தீமையற்றவை என்றெல்லாம் பார்க்கமாட்டார்கள். அ
கைக்கு எது கிடைக்கிறதோ அதை வாங்கிவிடுவார்கள்.

இந்த அபாயம் உள்ள துறையில் கண்ணன் தன் சிறப
தொண்டைச் செய்ய வேண்டியிருக்கிறது. குழந்தைகளை விரு
படிக்கும்படி செய்யவும் அந்த விஷயங்கள் ருசியுடன் பயனுள்ள
யாகவும் இருக்கும்படி பார்த்துக் கொள்வதுமே எங்கள் பொ
விஞ்ஞான விந்தைகளை அவர்கள் மனம் அலுக்காமல் தெ
கொள்ளும்படி சித்திர விளக்கத்துடன் வெளியிடுகிறோம். நம்
லுள்ள பல முக்கிய ஊர்களைப் பற்றியும், பெரியோர்களைப் பற்
பட்சிஜாதிகளைப் பற்றியும், குழந்தைகளே தெரிந்து கொள்ளும்ப
எழுதும்படியும் ஊக்குவிக்கிறோம். குழந்தைகளுடைய உலகம்
வடைவதற்கான முறையில் கண்ணன் கழகத்தை ஆரம்பி
நடத்துகிறோம். அவர்களுடைய கற்பனையைத் தூண்டுகின்ற
களும் கர்ணபரம்பரைக் கதைகளும் வெளியிடுகிறோம்.

இளம் மனத்தைக் கெடுக்கக்கூடிய முறையில் விஷயங்
வெளியிடுவதில்லை. "அமெரிக்காவில் சிறுவர்களுக்கென நட
படும் பத்திரிகைகளில் பல, சிறுவர்கள் மனத்தைத் தீமையி
செலுத்துவனவாக இருக்கின்றன. வீரம் வீரம் என்று சொல்
கொண்டு குற்றச் செயலையும் திருட்டு எத்துக்களையும் சொல்
கொடுக்கின்றன. வாழ்க்கையில் இல்லாத துப்பாக்கிப் பிரயோ
களைச் செய்யத் தூண்டுகின்றன" என்று ஹிந்துவில் வெளியா
கட்டுரையைச் சமீபத்தில் படித்திருப்பீர்கள். வாழ்க்கையை ஒட்
முறையிலும் மனித இயல்புக்கு ஏற்ற வகையிலும் வருங்கா
சந்ததியார்களை உருவாக்குவதே கண்ணனின் நோக்கம்.

கல்விமான்களும், ஆசிரியர்களும், பெரியோர்களும், குழந்
ளுக்கு என்று கண்ணனில் எழுதுகிறார்கள். உங்கள் குழந்தைகளு
அவர்கள் பிஞ்சு உள்ளத்தில் எழும் கற்பனைகளை எழுத்தில் எழுதி
பழகுகிறார்கள். பெற்றோர்களுக்கான பெரும் பொறுப்பைக் கண்ண
பகிர்ந்து கொள்கிறது. நீங்கள் அவர்கள் சிறந்தவற்றையே படி
க்கும்படி ஆரம்பித்து வைத்துவிட்டால் பிறகு தானாகவே அவர்களுக்
உயர்ந்தது எது, தாழ்ந்தது எது என்று தெரிந்துவிடும். கண்ணன்
குழந்தைகளுக்கு நல்ல ருசியும் பகுத்தறியும் திறமையும் வளர்ந்து
வரும்படி பார்த்துக் கொள்கிறது. ஆகவே, உங்கள் ஆதரவுக்கு
நம்பிக்கைக்கும் இன்றுபோல் என்றும் கண்ணன் பாத்திரமாக இருக்
கும் என்று உறுதி கூறுகிறோம்.

— ஆசிரியர்.

பொருளடக்கம்

மலர்: 3 இதழ்: 11

நவம்பர் '52

211784

குழந்தைகளே !	பக்கம் ..	2
அன்பின் அடிமை - ரா. நா.	.. ..	3
அபாயச் சங்கு - 'நீலம்'	.. ..	8
கமலியின் கண்ணீர் - எஸ். மீனாக்ஷி	.. ..	13
கர்வ பங்கம் - குகப்ரியை	.. ..	17
பெரிய புளுகன் - 'கீரன்'	.. ..	21
ஓர் இரவு - ப. ரா.	.. ..	26
மறதி - என். எஸ். ஸ்ரீநிவாஸன்	.. ..	32
பலே மந்திரி - டி. வி. ரங்கசாமி	.. ..	36
பச்சைக்கல் சங்கிலி - எஸ். டி. ஸ்ரீநிவாஸன்		37
கண்ணன் கழக அங்கத்தினர்கள்	..	43
கிராமபோன் - புரொபஸர் விஞ்ஞானம்	..	45
எலியின் கல்யாணம் - எஸ். கே. அரவிந்தன்		48
மன்னிப்பு - எஸ். கே. ராவ்	.. ..	49
கேட்டீர்களா !	..	52
கண்ணன் தபால்	..	53

வருஷ சந்தா ரூ. 3/-

கலைமகள், மஞ்சரி, கண்ணன்

குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

குழந்தைகளே!

அப்பாடா! இப்பொழுதுதான் மனசு நிறைந்த திருப்தியுடன் நான் பெருமூச்சு விடுகிறேன். பதினையிரக் கணக்கான குழந்தைகளை ஒரே சமயத்தில் எப்படியடா திருப்தி செய்விப்பது, தீபாவளி என்று ஒன்று ஏன் வருகிறது, வந்தாலும் மலர் போடுவது என்ற வழக்கம் ஏன் உண்டாயிற்று என்றெல்லாம் நான் ரொம்பவும் கவலைப்பட்டு மண்டையை உடைத்துக் கொண்டிருந்தேன். நல்ல காலம், தீபாவளி வந்து போயும் விட்டது; அதே போல் கண்ணன் தீபாவளி மலர் வெளியாகி விற்பனையும் ஆகிவிட்டது. மருந்துக்குக்கூட ஒரு பிரதி எங்கும் கிடைக்கவில்லை. ஆனால் என் கவலை விட்டதா? அது தான் இல்லை. குழந்தைகள் புரட்டிவிட்டு, 'பூ, இதுக்குத்தானா இத்தனை ஆர்ப்பாட்டம்!' என்று சொல்லாமல் நம் சிரமத்தையெல்லாம் உணர்ந்து கொள்ளவேண்டுமே!

வரத் தொடங்கியது பாருங்களேன், பாராட்டுக்கள்! பம்பாய், சிலோன், மலேயாச் சிறுவர்கள் சிலர் தந்திகூடக் கொடுத்துவிட்டார்கள். 'பேஷ், பலே பேஷ், பலே பலே பலே பேஷ்' என்றும், 'அற்புதம், அபாரம், அமர்க்களம்' என்றும் கடிதங்களும் (சிலர் ஆனந்தத்தில் பாட்டுக்களாகவே பாடிவிட்டார்கள்) வந்து குவியத் தொடங்கின. அவை எல்லாவற்றையுமே கண்ணன் தபால் பகுதியில் வெளியிட எனக்கு ஆவல்தான். அப்படியானால் கண்ணனை 250 பக்கத்தில் பாராட்டு மலராகவே வெளியிட வேண்டியிருக்கும் என்று இரண்டொரு கடிதங்களை மட்டும் வெளியிட்டிருக்கிறேன். இப்பொழுதுதான் என்னால் நல்ல மூச்சு விட முடிகிறது!

'போலியைக் கண்டு ஏமாறாதீர்கள்' என்று மற்றப் பொருள்களுக்கு விளம்பரம் செய்வார்களே, தெரியுமா? அதேபோல் சகோதரப் பத்திரிகை ஒன்று மறைமுகமாகக் கண்ணன் மலர் மட்டமாக இருக்கும் என்று பிரசாரம் செய்ததாம்! 'ஆனால் கண்ணன் மலர்தான் ஏ-1; பிரசாரம் செய்த மலர்தான் மட்டம்' என்று ஒரு சிறுவர் சங்கமே திரண்டு எழுதி அத்தனை அங்கத்தினர்களும் கையெழுத்துப் போட்டு அனுப்பி யிருக்கிறார்கள். அப்படி யாராவது பிரசாரம் செய்தார்களோ என்னவோ, நமக்கு அதைப்பற்றிக் கொஞ்சமும் கவலையில்லை. எது உங்களுக்கு நல்ல எதிர்காலத்தைத் தோற்றுவிக்குமோ, எது உங்களுடைய இளம் மனத்தில் பசுமையாகப் பதிந்து உங்களைப் பிற்கால வீரனாகவும் தீரனாகவும் ஆக்குமோ, எது உங்கள் அறிவைப் பிரகாசம் பொருந்திய நல்வழிகளில் செலுத்துமோ, அதனையெல்லாம் எங்கிருந்தாலும் திரட்டி வந்து, கண்ணன் மூலம் உங்களுக்கு வழங்குவதுபற்றித்தான் நமக்குக் கவலை. ராஜாஜி போன்ற பெரியோர்களுடைய ஆசி நமக்குப் புதுப்பலத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கிறது. முன்னேறுவோம்; சிங்கத்தின் வீறுடன் நாட்டின் வலுவான, அழகான, அறிவுக் குழந்தைகளாக முன்னேறுவோம். உயர்ந்த சிற்பியாகவும் சிறந்த கலைஞனாகவும், அறிவில் நிகரில்லாத மேதைகளாகவும், முடிசூடாத் தலைவனாகவும் விளங்குவோம். அந்தப் பாதையை வகுக்கும் வழிகளிலேயே எப்பொழுதும் முன்னேறிச் செல்வோம். அதுதான் உண்மையான முன்னேற்றப் பாதை!

—ஆசிரியர்.

அரேபியக் கதை

அன்பின் அடிமை

ரா.நா.

முன்னொருகாலத்தில் டமஸ்கஸ் என்னும் நகரத்தில் அபூ அயூப் என்ற பெயருடைய பணக்கார வியாபாரி இருந்தான். மிகுந்த உழைப்பினுலும் நேர்மையான வாழ்க்கையினுலும் அவன் அந்த நகர மக்களால் மிகவும் போற்றப்பட்டு வந்தான். அவனுக்கு ஒரு பெண்ணும் ஒரு பிள்ளையும் இருந்தனர். மகன் பெயர் கனும். பிறகாலத்தில் 'அன்பின் அடிமை' என்று எல்லோராலும் புகழப்பட்டு வந்தான். அவன் மகா புத்திசாலி. அவனுடைய தந்தை மிகவும் அறிவாளிகளைக் கொண்டு கல்வி யளித்திருந்ததால் அவனுடைய வயதுக்கு மீறிய அறிவு பெற்றிருந்தான்.

அபூ அயூப் இறந்த சமயம் அவனுக்கு ஏராளமான சொத்து இருந்தது. அந்தச் சொத்தில் பெரும் பகுதி பட்டு ஜவுளி அடங்கிய மூட்டைகளாக இருந்தன. ஒவ்வொரு மூட்டையின் மீதும் 'பாக்தாதுக்கு' என்று எழுதப் பட்டிருந்தது.

அவன் இறந்த சில நாட்களுக்கெல்லாம் கனும் தன் தாயாரிடம் சென்று, "அம்மா! இந்தப் பட்டு ஜவுளி மூட்டைகளின்மீது அப்பா என் 'பாக்தாதுக்கு' என்று எழுதி வைத்திருக்கிருர்?" என்று கேட்டான்.

அதற்கு அவன் தாய், "குழந்தாய், உன் தந்தை அவைகளைப் பாக்தாதுக்கு எடுத்துச் சென்று அங்குள்ள வியாபாரிகளுக்கு விற்பனை செய்ய எண்ணியிருந்தார். ஆனல் அவர் புறப்படுவதற்கு முன் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார்" என்று கூறிவிட்டுக் கண்ணீர் வடித்தாள்.

இதைக் கேட்டதும் கனும் தானே இந்த ஜவுளிகளைப் பாக்தாத் நகருக்கு எடுத்துச் செல்லப் போவதாகக் கூறினன். தனது ஒரே மகன் பிரிந்து போவதை அவனுடைய தாயார் விரும்பவில்லை. அவள் கூறினள்:

"மகனே! நீ அவ்வாறு செய்யாதே. நீ மிகவும் சிறியவன். உனக்கு உலகம் தெரியாது. மேலும் அவ்வளவு தூரம் பிரயாணம் செய்ய உன்னல் ஆகாது. அதையும் தவிர உன்னைப் பிரிந்து நான் எப்படித் தனியாக இருப்பேன்?"

அவன் தாய் எவ்வளவோ கெஞ்சியும் கனும் கேட்கவில்லை. எப்படியாவது உலகத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற ஆசை அவனை ஆட்கொண்டது. தாயின் ஆட்சேபங்களுக்கெல்லாம் சமாதானம் கூறிவிட்டுத் தன்னைப் பாக்தாதுக்குச் செல்ல அநுமதிக்கும்படி கேட்டுக்கொண்டான். தன் மகன் ஒரே பிடிவாதமாயிருந்ததால் தாயும் கனமின் பிரயாணத்திற்கு அநுமதி கொடுத்தாள்.

ஊர் சுற்றும் ஆவல் அதிகரித்த கனும் உடனே நகருக்குள் சென்று தனக்குத் துணைபுரிவதற்காகப் பலம் பொருந்திய பல அடிமைகளை விலைக்கு வாங்கினன்; ஜவுளிகளை யும் மற்றச் சாமான்களையும் சுமந்து செல்ல நூறு ஒட்டகங்களை வாடகைக்கு வாங்கிக்கொண்டான். கடைசியில் வீட்டிற்கு வந்து தன் தாயார், தங்கை இருவரிடமும் விடைபெற்றுக்கொண்டு தன் பரிவாரங்களுடன் பாக்தாத் நகருக்குப் பிரயாணமானன்.

பாக்தாத் நகருக்கு வந்து சேர்ந்ததும் நல்ல வீடாகப் பார்த்துத் தன் சாமான்களைப் பத்திரப் படுத்தினன். அவனுடைய புதிய வீட்டைச் சுற்றி அழகிய தோட்டம் இருந்தது.

முதலில் சில நாட்கள் ஊரைச் சுற்றிப் பார்த்துச் சந்தோஷமாகக் காலம் கழித்தான். பிரயாணக் களைப்புத் தீர்ந்தவுடன் ஆடம்பரமாக உடை தரித்துக்கொண்டு வியாபார சம்பந்தமாக விசாரித்து வர வெளியே கிளம்பினன். தன் நிலைமையைப் பார்த்து அந்த ஊர் ஜனங்கள்பிரமிக்கும்படியாகத் தன்னுடன் பல அடிமைகளை அழைத்துச் சென்ருன். அந்த நகரத்திலுள்ள வியாபார நிலையை அறிந்துகொண்டு கனும் மறுநாள் அந்த ஊர்ச் சந்தைக்குச் சென்ருன். அவனுடைய அடிமைகள் பட்டு ஜவுளிகளைச் சுமந்துகொண்டு அவன் பின் சென்றனர். அவனுடைய சாமர்த்தியத்திஞலும் சாதுர்யத்திஞலும் கொண்டுபோன சரக்குகளைச் சுலபமாக விற்றுவிட்டான். இவ்வாறே தினசரி அவனுடைய வியாபாரம் திருப்திகரமாகவும் லாபகரமாகவும் நடந்து வந்தது. எந்த நாளும் அவன் கொண்டுபோன சரக்குகளில் எதையும் திருப்பிக் கொண்டு வந்ததில்லை.

இப்படி யிருக்கையில் ஒரு நாள் அவன் சந்தைக்குப் போயிருக்கையில் கடைகள் யாவும் மூடியிருக்கக் கண்டான். இதற்குக் காரணம் என்ன என்று விசாரிக்கையில் பிரபல வியாபாரி ஒருவன் இறந்து விட்டதாகவும் மற்ற வியாபாரிகள் அவனுடைய சவ அடக்கத்திற்குச் சென்றிருப்பதாகவும் அறிந்துகொண்டான். இறந்து போன வியாபாரியைக் கனுமுக்குத் தெரியுமாகையால், தன்னுடைய அடிமைகளைச் சரக்குகளுடன் வீட்டிற்கு அனுப்பிவிட்டு, வியாபாரியின் மரணக் கிரியைகளில் கலந்து கொள்ள அவனும் மயானத்திற்குச் சென்ருன்.

மயானத்தில் மற்ற வியாபாரிகளைக் கண்டதும், கனுமும் மரண ஊர்வலத்திலும் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டான். பிரார்த்தனைகளும் சடங்குகளும் நீண்ட நேரம் நடந்ததால், அவைகள் முடிவதற்குள் இராப் பொழுது தொடங்கிவிட்டது. இருட்டு

அதிகரித்துவிட்டால் வீடு செல்ல வழி தெரியாமல் போய்விடுமே என்று பயந்து அவன் யாரும் அறியாமல் மயானத்திலிருந்து நழுவி விட்டான்.

ஆனால் புறப்பட்டுச் சிறிது தூரம் சென்றவுடன் இருள் அதிகரித்து விட்டது. இருட்டில் வழிதவறி விட்டது. அங்குமிங்கும் போய்க் கடைசியாக நகர வாயிலுக்கு வருகையில் கதவு தாளிட்டுப் பூட்டப்பட்டிருந்தது. ஆகையால் கனும் தன் வீட்டிற்குச்செல்ல முடியாமல் தவித்தான். தான் இல்லாத சமயம் பார்த்துத் திருடர்கள் வீட்டினுள் புகுந்து தன்னுடைய விலை பெற்ற துணிகளையும் பணத்தையும் திருடிவிட்டால் என்ன செய்வது என்று கவலை அடைந்தான். பொழுது விடிந்தால்தான் கதவு திறக்கப்படும். அப்புறம் தான் இவன் உள்ளே சென்று வீட்டிற்குள் நுழையலாம். அது வரையில் இராப்பொழுதை எப்படிக் கழிப்பது என்று ஆலோசித்தான். நகரின் எல்லைப்புறத்தில் மற்றொரு மயானம் இருப்பதைக் கண்டு அங்கே இரவுபூராவும் தங்கலாம் என முடிவு செய்தான். அங்கே சென்று புல்தரையில் படுத்துத் தூங்குவதற்கு முயற்சித்தான்.

ஆனால் அவனால் தூங்கமுடியவில்லை. அவன் படுத்த சிறிது நேரத்திற்கெல்லாம் மயான வாயிற் கதவு திறக்கும் சத்தம் கேட்டு விழித்துக்கொண்டான். அவனை நோக்கி விளக்கு வெளிச்சம் வருவது கண்டு ஆச்சரியமடைந்தான். வெளிச்சம் அருகில் வந்தவுடன் விளக்கை ஒரு கறுப்பு அடிமை ஏந்தி வருவதைக் கவனித்தான். அவனுக்குப் பின்னால் மற்றும் இரு அடிமைகள் ஒரு பெரிய பெட்டியைச் சுமந்து வந்தனர்.

இப்படி வருபவர்கள் தன்னிடம் சிநேகமாக இருப்பார்களோ விரோதமாக இருப்பார்களோ என்று அவனுக்குச் சந்தேகமாக இருந்தது. ஆகையால் அருகிலிருந்த ஒரு பனைமரத்தின்மீது சந்தடி செய்யாமல் ஏறிக்கொண்டு என்ன நடக்கிறது என்று கவனித்து வந்தான்.

2

மூன்று அடிமைகளும் மயானத்திற்குள் வந்து பெட்டியைக் கீழே வைத்தனர். தங்கள் வசமிருந்த மண் வெட்டியால் ஆழமாகக் குழி தோண்டினர். அந்தக் குழியில் பெட்டியை வைத்து மண்ணைப் போட்டுக் குழியை மூடி விட்டனர். வேலை முடிந்தவுடன் மண் வெட்டியையும் விளக்கையும் எடுத்துக்கொண்டு சந்தடி செய்யாமல் வெளியேறிவிட்டனர்.

கனுமுக்கு இதெல்லாம் மிகுந்த ஆச்சரியத்தை அளித்தது. அந்தப் பெட்டியில் எதை வைத்து மூடினார்கள் என்பதை அறிய

ஆவலாக இருந்தான். அதனுள் ஏராளமாகப் பணமும் நகையும் இருக்கலாம் என்று எண்ணினான். எதற்கும் குழியை மறுபடியும் தோண்டி, பெட்டியில் என்ன இருக்கிறது என்று பார்த்துவிடத் தீர்மானித்தான். உடனே மரத்திலிருந்து கீழே இறங்கி, கையால் மண்ணைத் தோண்டி எறிந்தான். மிகவும் சிரமப்பட்டு மண்ணையெல்லாம் எடுத்த பிறகு பெட்டியைக் கஷ்டப்பட்டு வெளியே எடுத்துப் பார்த்தான். அது பூட்டப்பட்டிருந்தது. இதற்குள் விடிந்துவிட்டது. அருகில் இருந்த ஒரு கல்லை எடுத்துப் பூட்டை உடைத்துப் பெட்டியைத் திறந்தான்.

என்ன ஆச்சரியம்! பெட்டியில் பணமும் இல்லை; ஆபரணங்களும் இல்லை. ஓர் அழகிய இளமங்கையைக் கண்டான். ஆனால் அவள் மயக்கமடைந்து பேச்சு மூச்சின்றிக் கிடந்தாள். அவள் விலை பெற்ற ஆடைகளும் பலவிதமான உயர்தரமான நகைகளும் அணிந்திருந்தாள். இவைகளிலிருந்து அவள் அரண்மனையைச் சேர்ந்த பெண்ணாயிருக்கவேண்டும் என்று கனும் ஊகித்தான். இவ்வளவு அழகிய பெண் இவ்வளவு கொடுமைக்கு உட்பட நேர்ந்ததை நினைத்துத் துக்கமடைந்தான். அவளுக்குத் தன்னால் இயன்ற உதவி செய்வது என முடிவு செய்தான். அந்தப் பெண்ணை நிதானமாகப் பெட்டியிலிருந்து எடுத்துப் புல் தரையில் படுக்க வைத்தான். சுத்தமான காற்றுப் பட்டவுடன் அவள் மயக்கம் தெளிந்து கண்ணைத் திறப்பது கண்டு சந்தோஷமடைந்தான்.

அவள் எழுந்து உட்கார்ந்து கொண்டாள். இனிமையான குரலில் தன் தோழிகளைப் பெயர் சொல்லி அழைத்தாள். யாரும் தன் அழைப்புக்குப் பதில் சொல்லாதது கண்டு சுற்றுமுற்றும் பார்த்தாள். தான் ஒரு மயானத்தில் இருப்பதை உணர்ந்து பயமுற்று, 'கிரீச்' என்று கத்தினாள்.

இந்தச் சமயத்தில் கனும் அவள் முன் தோன்றி, தான் யார் என்பதை அவளுக்கு அறிவித்து, அவள் அங்கே கொண்டுவரப்பட்ட விவரத்தை விளக்கிக் கூறினான்.

இதைக் கேட்ட அழகி ஆச்சரியமடைந்தாள். தனக்கு நேரவிருந்த ஆபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றியதற்காகக் கனுக்கு நன்றி செலுத்தினாள். மேலும் கூறினாள்:

"ஐயா! நீங்கள் என்னைக் காப்பாற்றியது மட்டும் போதாது. என்னை யாரும் பார்க்காமல் அந்தப் பெட்டியிலேயே வைத்து மூடி, ஒரு குதிரை மீது வைத்து உங்களுடைய வீட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள். யாருக்கும் இந்த விஷயம் தெரியக்கூடாது. என்னுடைய எதிரிக்குத் தெரியாமல் பத்திரமாக எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யுமாறு உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். வீட்டிற்குப் போனவுடன் என் கதையைச் சொல்கிறேன்."

அந்தப் பெண்ணினுடைய அழகும் அவளுடைய இனிய பேச்சும் கனுமைப் பரவசப்படுத்தி விட்டன. தயக்கமின்றி அவளுக்கு எல்லாவிதமான உதவிகளும் செய்வதாக வாக்களித்தான். உடனே அவளை மீண்டும் பெட்டியில் வைத்து மூடினான். ஆனால்

காற்று உள்ளே போகும்படி மூடியைச் சற்று லேசாகவே மூடினான்.

சற்றுத் தூரம் சென்று ஒரு சிறு குதிரையை வாடகைக்குப் பேசிக் கொண்டு வந்தான். இதற்குள் நகரத் தலைவாயிலும் திறந்துவிட்டது. வீடு வந்து சேர்ந்ததும் பெட்டியைத் திறந்தான். அந்தப் பெண்ணை அழைத்து ஓர் அழகிய அறையில் கொண்டுபோய் விட்டான். அவள் ஒரு ஸோபாவில் சாய்ந்து இளைப்பாறினாள்.

அந்த அழகி இளைப்பாறுகையில் கனும் அவளை உற்று நோக்கினான். இப்பொழுது மிகவும் அழகாக அவனுக்குத் தோன்றினாள். இம்மாதிரி அழகு வாய்ந்தவள் தனது மனைவியாக வரவேண்டும் என்று அவன் ஆசைப்பட்டான்.

தன்னைக் காப்பாற்றி, தன்னிடம் இவ்வளவு பிரியமாக இருக்கும் கனுமிடம் அந்த அழகியும் ஆசை கொண்டாள். கனும் அளித்த சில பழங்களைச் சாப்பிட்டுக்கொண்டு அவள் தன் முகத் திரையில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கும் வார்த்தைகளைப் படிக்கும்படி கேட்டுக்கொண்டாள். கனும்அந்த முகத்திரையைத் தன் கையால் எடுத்து அதிலுள்ள எழுத்துக்களைப் படித்தான். அவன் முகம் உடனே மாறுபட்டது.

(தொடரும்)

கனும் ஒரு குதிரையை வாடகைக்குப் பேசி அழைத்து வந்தான்.

அபாயச்சங்கு

'நீலம்'

5
கோணல் மண்டையின் புகார்

தேடிக்கொண்டு வந்திருந்தவரை உள்ளே அழைத்து வருமாறு சுந்தரவதனம் சொல்லியனுப்பினர். பள்ளிக்கூடத்திலிருந்து சேது வாத்தியார்தான் மாமாவிடம் தன்னைப்பற்றிப் புகார் செய்ய வந்திருக்க வேண்டுமென்று ரகு கலவரப்பட்டான்.

சுந்தரவதனமும் வாத்தியாராகத்தான் இருக்கும் என்று எண்ணினர். ஆனல் என்ன ஆச்சரியம்!

காவி படிந்த பற்களைக் காட்டிச் சிரித்தபடி, "நமஸ்காரம் இன்ஸ்பெக்டர்வாள்! எல்லாரும் சௌக்கியந்தானே? பயலைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தாச் சோல்லியோ?" என்று கேட்டுக் கொண்டு, புஷ்பவனம் அங்கே வந்து நின்றார்.

ஆவேசக் குறிகளை மாற்றிக் கொண்ட மாமா தன் முகத்தில் புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, "வாங்கோ ஸார்; வாங்கோ" என்று புஷ்பவனத்தை வரவேற்றார்.

ரெயிலில் நடந்த மாதிரியே இப்போதும் இந்த நெருக்கடியிலிருந்து தன்னைக் காப்பாற்றிவிட மாட்டாரா இந்தப் புஷ்பவனம் என்று ரகுவுக்கு ஏதோ ஓர் அசட்டு நம்பிக்கை தோன்றியது.

பொதுப்படையாக இரண்டொரு வார்த்தைகளைப் பேசிவிட்டு வாடி, வதங்கிய முகத்தோடு அங்கே நின்றுகொண்டிருந்த ரகுவைப் பார்த்து, "ஏண்டா, என் என்னமோபோலே இருக்கே? உடம்பு சரியில்லையா?" என்று புஷ்பவனம் ரகுவைப் பார்த்துக் கேட்டார். அவன் முகத்தைத் தூக்கி விழித்துப் பார்த்தான்.

"முழிக்கிறதைப் பாருங்கோ ஸார், குறப்பயல் மாதிரி! இன்னிக்கு அவன் என்னவெல்லாம் செய்துட்டு வந்திருக்கிருன் தெரியுமா? நீங்களே விசாரியுங்கோ அவனை!" என்று மாமா மறுபடியும் பாதியில் நின்றிருந்த விசாரணையைத் துவக்கினர்.

"ஏண்டா அபாயச் சங்கு! மறுபடி ஏதாவது தகராறு? என்னப்பா விசேஷம்?" என்று கிண்டலாக ரகுவுக்கு ஒரு புதுப் பெயரையும் சூட்டி, புஷ்பவனம் விசாரித்தார்!

பேந்தப் பேந்த விழித்துக் கொண்டு நின்ருன் ரகு. அவன் ஒரேயடியாகக் கிலி பிடித்துப் போயிருந்தான்.

உள்ளே நடப்பதை யெல்லாம் கூர்மையாக ஒட்டுக் கேட்டுக் கொண்டும் தாங்கள் வைத்த நெருப்புச் சரியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறதா என்று கவனித்துக்கொண்டு மிருந்தனர் போலீஸ்காரர்கள் இருவரும். அவர்கள் ரகுவை 'அபாயச் சங்கு!' என்று புஷ்பவனம் பெயரிட்டழைத்ததைக் கேட்டுச் சிரித்தார்கள். "அபாயச் சங்கு! ரொம்பச் சரியான பெயர்!" என்று திரும்பத் திரும்ப அவர்கள் பேசிச் சிரித்துக்கொண் டிருந்தது ரகுவின் காதிலும் விழுந்தது. இந்த வாலை இனிமேல் அந்தப் புதிய பொருத்தமான பேரை வைத்தே கூப்பிட அவர்கள் தீர்மானித்தனர்.



"அவனை என்ன கேட்க வேண்டும்? ஒன்றுக்கொன்று சால் ஜாப்புச் சொல்லி ஏதாவது புளுகுவான். அதற்காகத்தான் நானே நேரிட, முன்னுடியே உங்களிடம் சொல்ல வந்திருக்கிறேன்" என்ற குரல் அங்கே கேட்டது.

'அபாயச் சங்கு', புஷ்பவனம், சுந்தரவதனம் ஆகிய மூவரும் குரல் வந்த திக்கைப் பார்த்தனர். அங்கே சேது வாத்தியார் நின்று கொண்டிருந்தார்.

ரகுவின் தலை 'கிர்' ரென்று சுற்றியது. இன்றோடு தன்னுடைய அத்தியாயம் தீர்ந்தது என்றுதான் நினைத்தான் அவன்.

"இந்தப் பழி இப்போது ஏன் இங்கு வந்து தொலையவேண்டும்? எரிகிற கொள்ளியை விசிறி விடவா?" என்று அவனுக்கு வேதனையாய் இருந்தது.

நரைத்த புருவங்கள்; பருத்த உதடுகள்; பருந்து மாதிரியான கண், மூக்கு இவற்றோடு குரூரமாகத் தோன்றிய சேது வாத்தியார் தம் ஆத்திரம் தீர, அன்று பள்ளிக்கூடத்தில் 'அபாயச் சங்கு' செய்த அட்டகாசம் அனைத்தையும் அவிழ்த்துக் கொட்டினார்.

சுந்தரவதனத்துக்கு அவமானம் சகிக்க முடியாமலிருந்தது. அவர் கண்களில் தீப்பொறி பறந்தது.

புஷ்பவனம் இதைக் கவனித்து விட்டார். அபாயச் சங்காக வந்து சேர்ந்திருக்கும் ரகுவை அவர் எங்கேயாவது கோபத்தால் பிய்த்து உதறிவிட்டால் என்ன செய்கிறது என்று அவருக்குத் தோன்றிவிட்டது.

"அதெல்லாம் சரிதான், ஸார்! இதை எல்லாம் பெரிசு பண்ணப் படாது. நாளடைவில் ஒழுங்காகி விடுவான்!" என்று அவர் சமாதானமாகச் சொன்னார். "ஏய் ரகு, வாடா இங்கே! ஒழுங்காக நடக்கிறேன் என்று ஸாரிடம் போய் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளேண்டா!" என்று அபாயச் சங்குக்குத் தப்பித்துக் கொள்வதற்கும் ஒரு வழியைக் காட்டிக்கொடுத்தார் புஷ்பவனம்.

பள்ளிக்கூடத்தில் அன்று நடந்த அவ்வளவும் அநாவசியமாகப் பெரிது பண்ணப்பட்டிருப்பதாக நினைத்த அபாயச்சங்கு, புஷ்பவனம் சொன்னதற்காகச் சேது ஸாரிடம் போய்ப் பெயரளவுக்கு, மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். மேற்கொண்டு அங்கே நிற்க விருப்பமில்லாமல் ரூமை நோக்கி நடந்தான் அவன்.

பிறகு மாமா, புஷ்பவனம், சேது ஸார் ஆகிய மூவரும் ஏதோ தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டிருந்தார்கள். விவரம் என்னவென்று தெரியவில்லை. கடைசியில் மாமா சொன்ன வார்த்தைகள் மட்டும் தெளிவாகக் காதில் விழுந்தன.

"ஆமாம் ஸார். நான் சொன்னது மட்டும் ஞாபகமிருக்கட்டும். அவ்வளவுதான்! அநேகமாக முன்னுடியே வந்தாலும் வந்துவிடுவேன்" என்று சுந்தரவதனம் சொன்னார். "ஆகா" என்று சேது ஸார் தன் கோணல் மண்டையை ஆட்டிவிட்டு வாசல் பக்கமாக நடந்துகொண்டிருந்தார். 'ஒழிந்தது சனி' என்று ரகு மனசுக்குள் சொல்லிக் கொண்டான்.

'அட! மாமா எங்கே போகிறார்? முன்னுடியே வந்தாலும் வந்துடு

வேன் என்றுரே! எங்கேயாவது வெளியூர்ப் பிரயாணமோ? நீனே விருக்கட்டும் என்று என்னவோ சொன்னுரே? அதென்ன விஷயம்?' என்று அபாயச் சங்கு ஆராய்ச்சியில் இறங்கினுன்.

"எய் அபாயம்! வாடா இங்கே! அங்கே என்ன பதுங்கறே?" என்று புஷ்பவனம் மறுபடியும் அவனை வம்புக்கு இழுத்தார்.

"என்டா உனக்கு இந்த ...ண்டா வாதம்! அதெல்லாம் ...தப் பட்டணத்துலே பலிக்காதப்பா!" என்று விளையாட்டாகவே அவனைத் திருத்தினுர் அவர்.

காலையில் போலீஸ்காரர்களை 'மத்தாப்புக்குச்சி' என்று கிண்டல் செய்ததுபற்றியும் பள்ளிக்கூடத்தில் படுத்திவைத்த பாடுகளைப்பற்றியும் சுந்தரவதனம், வாத்தியார் போனபின்னர் புஷ்பவனத்தினிடம் விரிவாகச் சொன்னுர்.

புஷ்பவனத்துக்குப் பேச்சு அடைத்துவிட்டது. புகையிலைச் சாறு வாயில் ஊறி நிரம்பிவிட்டதால் அவர் கைகளாலும், கண்களாலும் மாமாவைச் சாந்தப்படுத்த ஏதேதோ சமிக்ஞைகளைச் செய்து கொண்டிருந்தார். இதைப் பார்த்ததும் மறுபடியும் ரகுவுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

ஒரு வழியாகப் புஷ்பவனமும் விடைபெற்றுக் கொண்டார். இன்னும் சில நாட்களுக்குப் பிறகு திரும்பி வருவதாகவும், அதற்குள் நல்லவன் என்ற பெயர் எடுக்கும்படியும் அபாயச் சங்கினிடம் அவர் சொல்லிக்கொண்டு புறப்பட்டார். அப்போது இரவு மணி 7-30 இருக்கும்.

வாசலில் யாரோ, "ரகு! ரகு!" என்று கூப்பிட்ட குரல் கேட்டது.

"எசமான்! எசமான்! அதோ அது வந்திடிச்சு! நான் போய்க் கூட்டியாறேன். அதுக்கும் இரண்டு போட்டனுப்புங்க!" என்று 98-ஆம் நம்பர் மாமாவிடம் கூறிவிட்டுத் தெருவை நோக்கி வெளியே பாய்ந்தான்.

அங்கே அப்போது வந்ததும், குரல் கொடுத்ததும் பரசுதான் என்பதில் ரகுவுக்குச் சந்தேகமில்லை. ஆனால் பரசு, பட்சிபோலப் பறந்து போய்விட்டான். 98-ஆம் நம்பர் திரும்பி வந்து பரசு ஓடிவிட்டதாகத் தெரிவித்தான்.

சற்றுத் தணிந்திருந்த மாமாவின் கோபத்தை இந்தச் சம்பவம் மறுபடி கிளறிவிட்டது. அவர் அபாயச் சங்கைக் கூப்பிட்டு, "இனிமேல் அந்தப் பரசுவுடன் நீ சேர்ந்தால் உன்னை வெட்டி முழங்கால் சில்லைப் பெயர்த்துவிடுவேன். இது என்ன உங்கள் ஊர் பஜனை மடம் என்று நினைப்பா?" என்று கர்ஜனை செய்தார்.

'எல்லாத் தொந்தரவும் இன்றைக்கேதானா நடக்கவேண்டும்?' என்று அபாயச் சங்கு அங்கலாய்த்துக்கொண்டான்.

இரவில் வேண்டா வெறுப்பாகச் சாப்பிட்டுவிட்டுப் படுக்கச் சென்றான் அபாயச் சங்கு. அசதி மிகுதியால் சீக்கிரமே தூக்கம் வந்துவிட்டது. மத்தாப்புக்குச்சிகளும் கோணல் மண்டை சேது வாத்தியாரும் பள்ளிக்கூட வகுப்புகளையும் மாறி மாறி அவன் கனவில் தோன்றின. எல்லாரும் அவனை, "அபாயச் சங்குடோய்" என்று கலாட்டா பண்ணுவது போலவும் இருந்தது. பொழுது விடிந்துவிட்டது. கண்ணைத் திறந்து பார்த்தபோது வீட்டில் மாமாவைக் காணோம்! மாமா எங்கே போய்விட்டார்?

(தொடரும்)

எண்ணிலே படங்கள்

(1 முதல் 9 வரையில்) **'மூட்டை'**



கமலியின் கண்ணீர்

எஸ். மீனாக்ஷி

பசுபதிக்கு, கோபத்தால் முகம் ஜிவு ஜிவு என்று ஆகிவிட்டது. மீசை இருந்திருந்தால் துடித்துக்கொண்டிருக்கும். ஆனால் மீசை இல்லை! "சரி, சரி! எல்லாம் எனக்குத் தெரியும்! இன்று பாங்க் சனிக்கிழமையாதலால் மூடியிருப்பார்கள். திங்கட்கிழமை பணம் எடுத்துக்கொடுத்துத் தொலைப்பதாக உங்கள் உபாத்தியாயினியிடம் சொல்லித் தொலை!.. நல்ல பள்ளிக்கூடம்! நல்ல விளையாட்டு விழா!" என்று கோபத்துடன் தன் முன்னால் கண்களைக் கசக்கிக்கொண்டிருந்த தன் பெண் கமலியை நோக்கி இரைந்தார்.

கமலியின் கண்களில் நீர் தளும்பிக்கொண்டிருந்தது. "சரி அப்பா! திங்கட்கிழமையாவது அவசியம் கொடுங்கள். இல்லாத போனால் என் பெயரை அடித்து விடுவார்கள். விளையாட்டு விழாவில் சேர முடியாது" என்றாள் கமலி. துக்கத்தினால் அவள் தொண்டை அடைத்துக் கொண்டது. பசுபதி பதில் சொல்லவில்லை. தலையை மாத்திரம் அலட்சியமாக அசைத்தார். கமலி உள்ளே போய் விட்டாள். பசுபதி மெதுவாக நாற்காலியில் சாய்ந்தார்.

மாதக் கடைசியாய் விட்ட சமயத்தில், கமலி அவரிடம் ஐந்து ரூபாய் கேட்ட போது அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. மாதக் கடைசியில் பணம் கேட்டால் எல்லா அப்பாக்களுமே அப்படித்தானே! பாழாய்ப் போன பள்ளிக்கூடத்தையும் விளையாட்டு விழாவை ஏற்பாடு செய்த நிர்வாகஸ்தர்களையும் மனதாரச் சபித்தார். கமலியின் கண்ணீர் அவர் மனத்தைக் கொஞ்சம் உலுக்கவே செய்தது. ஆனால் அவள் கேட்ட பணம் இல்லையே! நண்பர்களிடம் கேட்டு வாங்கலாம் என்றாலும் அவர்களும் மாதக் கடைசி என்ற சாக்கைத்தானே சொல்லுவார்கள்? அவர் பர்ஸில் ஒரே ஐந்து ரூபாய் நோட்டு இருப்பது அவருக்கு மறந்து போகவில்லை. ஞாயிற்றுக்கிழமை மாலை, அவர் வெகுவாக மதிப்பு வைத்திருக்கும் ஒரு பாடகியின் சங்கீதக் கச்சேரி இருந்தது. அந்தச் சங்கீதக் கச்சேரியை முதல் வகுப்பில் உட்கார்ந்து ரசிக்கவேண்டும் என்பதற்காகத்தான், முதல் வகுப்புக் கட்டணமான ஐந்துரூபாயை அவர் பத்திரப்படுத்தி வைத்திருந்தார்.

படிப்பிலும் சரி, விளையாட்டிலும் சரி, கமலிதான் தன் வகுப்பில் முதலில் இருந்தாள். அவளைத் தலைவியாக வைத்து இன்னும் ஒன்பது சிறுமிகளையும் சேர்த்தெடுத்தாள் தலைமை உபாத்தியாயினி. அந்தப் பத்துப் பேருக்கும் ஒரே மாதிரியான ஆடைகள் தயாரித்து அணிவித்து, அற்புதமான நடனங்கள், பாட்டுக்கள் எல்லாம் சொல்லிக் கொடுத்து, முதல்

பரிசைத் தங்கள் பள்ளிக்கூடத்திற்குக்கொண்டு வந்துவிடவேண்டும் என்பதுதான் அந்த பள்ளிக்கூட உபாத்தியாயினிகளின் ஏகோபித்த திட்டம். அவர்கள் அந்த விஷயத்தில் கமலியின்மீது அபார நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆடை, ரிப்பன், பொத்தான், புஷ்பம் முதலிய செலவுகளுக்காகப் பங்கெடுத்துக் கொள்ளும் பத்துப் பேர்களையும் தலா ஐந்து ரூபாய் வாங்கிவரக் கட்டளை இட்டிருந்தனர். ஆனால் பசுபதி இதைப் பற்றியெல்லாம் கவலைப்பட்டாரா? இல்லை! திங்கள்கிழமை கமலி ரூபாய் கேட்கும்போது, ரூபாய் கிடைக்கவில்லை! ‘நீ வேண்டுமானால் விளையாட்டில் சேரவேண்டாம்’ என்று சொல்லிவிடலாம் என்று தீர்மானித்தார். கவலையில்லாமல் நாற்காலியில் சாய்ந்தவாறு கண்ணயர்ந்தார்.

2

திங்கள்கிழமை காலை தயங்கியவாறே கமலி பசுபதியை நெருங்கினாள். “அப்பா! ரூபாய் தருகிறீர்களா?” என்றாள். பயத்தால் அவ தொண்டை நடுங் யது.

“ரூபாயா?..... ரூபாய் கிடைக்கவில்லை அம்மா! பாங்கிலும் பணம் இல்லை! போனால் போகிறது! அடுத்த வருஷம் விளையாட்டு விழாவில் பங்கெடுத்துக் கொண்டால் போகிறது!” என்று சொல்லிக்கொண்டே பசுபதி அலட்சியமாகத் தன் பார்வையைப் பத்திரிகையில் செலுத்தினார். கமலி ஏமாற்றத்தினால் கற்சிலைபோல் நின்றுவிட்டாள். அவள் கண்களிலிருந்து நீர் தாரையாக வழிந்தது. சில விநாடிகளில் துக்கத்தை அடக்கிக்கொண்டு, “என் அப்பா! நேற்று உங்களுக்குச் சங்கீதக் கச்சேரிக்கு மட்டும் போக ஐந்து ரூபாய் இருந்ததே? ஆனால் பள்ளிக்கூடத்தின் நம்பிக்கையே உருவாக இருக்கும் எனக்கு ஐந்து ரூபாய் கொடுத்து அதன் மூலம் பள்ளிக்கூடத்திற்குக் கௌரவமளிக்க உங்களுக்கு மனசில்லையோ?” என்றாள். அவள் பேச்சில் கோபம் தொனித்தது.

அவ்வளவுதான்! பசுபதிக்கு அடக்க முடியாத கோபம்

உண்டாயிற்று. "அதிகப் பிரசங்கிக் கழுதை! எனக்கு உபதேசம் செய்ய வந்து விட்டாயோ? நீ பள்ளிக்கூடம் போனது போதும்!" என்று இரைந்துகொண்டே பளார் பளார் என்று கமலியின் கன்னங் களில் அடித்துவிட்டார். கமலிக்கு அந்த விநாடியில் தலை சுற்றியது! கடார் என்று மயங்கிக் கீழே விழுந்துவிட்டாள்.

பசுபதி பயந்தே போனார். 'கமலி! கமலி!" என்று இரண்டு தடவை கூப்பிட்டார். பேச்சு மூச்சில்லை! அதற்குள் கமலியின் தாயார் பதறிப்போய் அடுக்களையி லிருந்து ஓடி வந்தாள். கமலியின் அண்ணா டாக்டரைத் தேடி ஓடினான்.

நல்ல வேளையாக டாக்டர் உடனேயே வந்துவிட்டார். கமலியைப் பரிசோதித்தார். "சார்! குழந்தைக்குப் பலமான அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. நிலைமை கவலைக்கிடமாகத்தானிருக்கிறது. உடனே ஆஸ்பத்திரியில் கொண்டு போய் அட்மிட் செய்ய வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே சில முதல் உதவிகளைச் செய்தார்.

கமலிக்குப் பிரக்ஞை வர இரண்டு நாட்களாயின. ஆஸ்பத் திரி டாக்டர், "இனிமேல் கவலை இல்லை" என்று கூறிவிட்டார். இதற்குள்ளாகப் பசுபதிக்கு நூறு

ரூபாய்க்குமேல் செலவாகிவிட்டது. மிகுந்த சிரமத்தின் மேல் யாரிடமோ கடன் வாங்கி யிருந்தார்.

முதல் முதலாகக் கண்களை விழித்துக் கொண்ட கமலி, "அப்பா! விளையாட்டு விழாவிற்கு நீ இன்னும் ரூபாயே தர வில்லையே?" என்றாள்.

பசுபதியின் உள்ளம் நெகிழ்ந்து விட்டது. "இதோ ரூபாய்! பத்து ரூபாயாக வேண்டுமானாலும் எடுத்துக் கொள், கமலி! உனக்கு இல்லாத ரூபாயா! இதோ! பத்து ரூபாய்" என்றார் கையில் கரன்ஸி நோட்டை எடுத்துக் கொண்டே. அப்போதுதான் அவர் மனத்தில் சமாதானம் நிலவியது.

3

"என்ன அப்பா! தூக்கத்திலே, 'ரூபாய் ரூபாய்' என்று பேசினீர்களே. அப்பாவிற்குத் தூக்கத்தில்கூட பண நினைவுதான்!" என்றாள் கமலி சிரித்துக் கொண்டே. அப்போதுதான் அவள் பிற்பகல் பள்ளிக்கூடத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள்.

பசுபதி திடுக்கிட்டு எழுந்தார். தான் இவ்வளவு நேரம் கண்டது கனவுதான் என்று தெரிந்துகொண்டதும் அவர் மனத்தில் கொஞ்சம் கொஞ்சமாக நிம்மதி பரவ ஆரம்பித்தது. என்ன பயங்கரமான கனவு!

"ஏனம்மா! நீ இன்னும் பள்ளிக்கூடத்திற்குப் புறப்பட வில்லையா?" என்றார் பசுபதி.

"புறப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். நீங்கள்தான் பத்து நிமிஷத்திற்குள் ஒரேயடியாகத் தூங்கிவிட்டீர்கள்" என்றாள் கமலி.

"இந்தா கமலி! பர்ஸில் ஒரு ஐந்து ரூபாய் இருப்பதை மறந்தே விட்டேன்! இதை உங்கள் விழாவிற்குக் கொடுத்துவிடு. அப்புறம் திங்கள்கிழமை யன்று அதற்கு ஏதாவது செலவு வந்துவிடும்" என்றார் சிரித்துக்கொண்டே. அவர் கையிலே ஒரு புத்தம் புதிய ஐந்து ரூபாய் நோட்டு இருந்தது.

கமலியின் கண்களில் இப்போது நீர் தளும்பியது. ஆனால் இப்போது அது ஆனந்தக் கண்ணீராக இருந்தது. அப்பாவின் கனவைப் பற்றியும் அதை நினைத்துப் பயந்து, அவர் தம் சங்கீதக் கச்சேரி ஆசையைத் தியாகம் செய்து ரூபாய் கொடுக்க முன் வந்ததையும் அவள் கண்டாளா, என்ன?

குழாய் ரிப்பேர் செய்பவன்: இந்த வீட்டுக் குழாய்தான் ரிப்பேருங்களா?

வீட்டுக்கார அம்மாள்: ஆமாம். பத்தாம்தேதி சொன்னதற்கு இப்பொழுதுதானா வருகிறாய்?

குழாய் ரிப்பேர் செய்பவன்: ஓகோ! அப்ப இந்த வீடு இல்லே. நான் ஒன்பதாம் தேதியே சொன்ன வீட்டுக்கு அல்லவா போகணும்!

கர்வபங்கம்

‘குகப்ரியை’

பாண்டவர்கள் வனவாசம் செய்தது தெரியுமல்லவா? வனவாசத்திலே ஒரு நாள் அர்ஜுனன் உல்லாசமாய்ப் பேசிக் கொண்டும் சிரித்துக்கொண்டும் இருந்தான். பகல் நேரத்திலேயே வழக்கமாய்த் திரும்பித் தங்கள் இருப்பிடம் வந்து சேரும் பீமன் அன்று பிற்பகலாகியும் ஏனோ வரவில்லை. அஸ்தமன சமயம். தரும புத்திரர் தம் மாலை அநுஷ்டானங்களைச் செய்யும் பொருட்டு எழுந்து நதிக்கரையை நோக்கி நடந்தார். கண்ணபிரான் எங்கெல்லாமோ சுற்றியலைந்து களைத்தவராய் வந்து சேர்ந்தார். அர்ஜுனன் அகமும் முகமும் மலர்ந்து அவரை வரவேற்றான்.

“என்ன அர்ஜுனா! சாயங்கால வேளையிலே நதிக்குப் போகவில்லையா?” என்று கேட்டுக் கொண்டே அவன் அருகே உட்கார்ந்தார். அர்ஜுனனுக்குத் தான் மிகுந்த தெய்வபக்தி உள்ளவன் என்றும் தன் உடன் பிரந்த மற்ற நால்வரும் தன்னை விடப் பக்தியிலே குறைந்தவர்கள் என்றும் எண்ணம். கண்ணனைப் பார்த்துப் பரிகாசமாக, “மூத்தண்ணா நதிக்குப் போய்விட்டார். மற்றவர்கள் எங்கே தேகப் பயிற்சி செய்துகொண்டிருக்கிறார்களோ?” என்று புன்னகையுடன் பதிலளித்தான் அவன்.

கண்ணன் முகத்திலும் இளமுறுவல் அரும்பிற்று. “சரி! நாம் சற்று நேரம் உலவப்போவோமா?” என்றார். காண்டீபத்தைக் கையிலெடுத்துக்கொண்டு கிளம்பினான் அர்ஜுனன். “உலவும் பொழுது கூட வில் வேண்டுமா?” என்றார் கண்ணன். “அதென்ன? அப்படிச் சொல்லுகிறாய், கண்ணா! சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்த பொழுதுகூட நான் காண்டீபத்தைத் தரையில் வைத்ததில்லை. என் கைகளே விற்பூண்ட கைகள் அல்லவா? காண்டீபமின்றி நீ நினைப்பதுபோல் தவம் புரியச் சென்றிருந்தால் சிவபெருமானே நேரில் என்னுடன் போருக்கு வந்திருப்பாரா?” என்று மிடுக்குடன் பதிலளித்தான். உடல் வலிமையினாலும் தவ வலிமையினாலும் நாம் சிவபெருமான் உமாதேவியுடன் வந்து காட்சி தரும்படியல்லவா செய்துவிட்டோம் என்று எண்ணினான் அவன். ‘சிவபெருமானை வழிபடுவதிலே நமக்கு மிஞ்சியவர் யார்?’ என்ற கேள்வி அவன் முகத்திலே தெரிந்தது. கண்ணன்

பதிலே பேசவில்லை. மௌனமாக அவனைப் பின்தொடர்ந்தார்.

மஞ்சள் வெயில் அந்தக் காடு முழுவதையும் பொன்மயமாக்கிக் கொண்டிருந்தது. இருவரும் அழகு செறிந்த சோலைகளில் புகுந்து புறப்பட்டு மேற்கு நோக்கிச்சென்று கொண்டிருந்தனர். எவ்வளவு நேரம் நடந்திருப்பார்களோ தெரியாது. கங்கா நதியின் சலசல வென்ற சப்தம் அவர்கள் செவிகளிலே தெளிவாய்க் கேட்டது. சாயங்கால வேளையிலே மலரும் மலர்களின் இனிய நறுமணம் அங்கே நிறைந்திருப்பதுபோலத் தோன்றிற்று. ஆச்சரியத்தினால் அவன் கண்கள் மலர்ந்தன. "கண்ணா! இதென்ன சுகந்தம்! எந்தப் புஷ்பத்தின் வாசனை என்றே விளங்கவில்லை. அடாடா!" என்று வியந்தான்.

கண்ணன் புருவத்தை நெறித்த வண்ணம், "நானும் அதைப் பற்றியேதான் எண்ணமிட்டுக்கொண்டிருக்கிறேன். வட திசையிலிருந்துதான் இந்தக் காற்று வருகிறது. அந்தப் பக்கத்திலே மிகச் சிறந்ததொரு பூஞ்சோலை இருக்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே வடக்கு நோக்கி நடந்தான் கண்ணபிரான். இருவரும் சற்று நேரம்தான் நடந்திருப்பார்கள். எதிரே,

மிகப் பெரிய குவியல்களாக வரிசை வரிசையாய் மலர்கள் குவிந்திருந்தன. ஆனால் அவைகள் புத்தம் புதிய மலர்களல்ல. எங்கேயோ பூஜை செய்யப்பட்டவை.

"அடேயப்பா! இதென்ன? போராகக் குவிந்திருக்கிறதே! அதிலும் எத்தனை எத்தனை வகைகள்! இங்கே எப்பொழுதுமே வஸந்த காலம்தானோ?" என்று கேட்டான் அர்ஜுனன்.

"எனக்கென்ன தெரியும்? நாம் எங்கேயோ வழி தவறி, கைலாய கிரிக்கு வந்து விட்டோமோ என்று தோன்றுகிறது. ஆனால் பனி மயமான சிகரங்களைக் காணோம். அதோ நெடுந்தூரத்தில் யாரோ வருவது தெரிகிறதே, யார் கேட்போம்" என்றார் கண்ணன்.

இருவரும் முன்னே நடந்தனர். இரு புறமும் மலர்க் குவியல்கள். இடையே தெரிந்த தடத்திலே நடந்தனர். அந்தக் குவியல்களினிடையே வந்துகொண்டிருந்த வேலையாட்கள் பூத கணங்கள்போல் காட்சியளித்தனர். "நீங்கள் யார்?" என்று மிடுக்குடன் கேட்டான் அர்ஜுனன். வந்தவர்கள் தலைகளிலெல்லாம் பெரிய பெரிய கூடைகள். அதிலே நிறைய மலர்கள். ஒவ்வொருவரும் வந்து வந்து அந்த வாடிய மலர்களைக் கொட்டி விட்டு வெறுங் கூடையுடன் திரும்பிக்கொண்டிருந்தனர். அவர்களுள் முதல்வன் நிமிர்ந்து பார்த்து, "நீங்கள் யார்?" என்று கேட்டான்.

"நாங்கள் க்ஷத்திரியர்கள். காட்டைச் சுற்றிப் பார்க்க வந்தோம்" என்றார் கண்ணன்.

"அப்படியா?" என்று கேட்டவனாய், "நாங்கள் இந்தக் கைலாய மலையிலேயுள்ள பூத கணங்கள்; சிவபெருமானுக்குப் பணி செய்பவர்கள் பூவுலகத்திலே யாரோ ஒருவர் பாண்டு மகாராஜனின் பிள்ளையாம்; பீமசேனன் என்று பெயராம்; அவர் ஓயாமல் ஒரு பூஜை செய்கிறார்; செய்கிறார்; அப்படிச் செய்கிறார்; எங்களுக்கு அந்த நிர்மால்ய புஷ்பங்களை வாரி எடுத்து எடுத்துக் கை சலித்து விட்டது. நாளை முதல் சிவபெருமானிடம் ஒரு வரம் கேட்கலாமா என்றுகூட ஒரு யோசனை. இந்தப் பூவுலகத்து மனிதர் செய்

யும் பூஜையை எங்களால் நிர்வகிக்க முடியவில்லை. எங்களுக்கும் உங்களைப்போல் நான்கு கைகளோ, அல்லது பன்னிரண்டு கைகளோ உண்டாகும்படி அநுக்ரகிக்க வேண்டும் என்று கேட்கப் போகிறோம்'' என்றான் அவன்.

''ஆமாம்! இவ்வளவு பலசாலிகள், வல்லமையுள்ளவர்கள் என்று பெயர் பெற்ற உங்களுக்கே சலித்துப் போகும்படி இருக்கிறதென்றால் அந்த ராஜகுமாரன் எத்தனை கைகளினால் பூஜை செய்கிறான்! ஒரு வேளை பாணாசுரன்போல் ஆயிரம் கைகள் இருக்குமோ?'' என்று சந்தேகப்படுபவர்போல் கேட்டார் கண்ணன்.

''அடாடா! அந்த அற்புதத்தை ஏன் கேட்கிறீர்கள்? அந்தப் பீமசேன மகாராஜனுக்கு இரண்டே கைகள் தான். ஆனால் அவர் கைகளால் பூஜிப்பதில்லை. மனத்தினாலேயே பூஜை செய்கிறார். அதனால் தான் எல்லையில்லாதபடி மலர் வனங்களையே கொணர்ந்து பூஜை செய்கிறார்; நாங்கள் திணறிப் போகிறோம். சிவபெருமானும் அவரது இந்தப் பூஜையைத்தான் பெருமையாக மானஸ பூஜை என்று பேசுகிறார்'' என்றான். அர்ஜுனன் முகம் சுண்டி மௌனமாக நின்றான். கண்ணபிரான் முகத்தில் குறும்புச் சிரிப்புத் தவழ்ந்தது.

பொய்யன்

ஓர் ஊரில் ஒரு தனவந்தர் இருந்தார். அவர் ஒவ்வொரு வருஷமும் ஒரு விழா நடத்துவார். அந்த விழாவில் அநேகருக்குப் பரிசுகள் வழங்குவார்.

ஒருவன் எதில் கெட்டிக்காரன் என்று சொல்லிக்கொண்டு வருகிறானோ அதே விஷயத்தில் அவனைப் பரிசோதித்துப் பிறகுதான் பரிசு வழங்குவார். இந்த விஷயம் யாவருக்கும் தெரிந்ததே.

ஒரு சமயம் இந்த விழா நடந்தது. பரிசுப் போட்டியில் கலந்த ஒருவனைப் பரீட்சிக்க நேர்ந்தது. ''உன் பெயர் என்ன?'' என்று கேட்டார் தனவந்தர்.

''பொய்யன்'' என்று பதில் வந்தது.

''நீ எதில் தேர்ச்சி பெற்றவன்?'' என்றார் அவர்.

''நான் என் ஆயுளிலேயே இன்று வரையில் ஓர் உண்மையைக் கூடச் சொன்னது கிடையாது. பொய்யே சொல்லிப் பிழைக்கும் என் திறமைக்குப் பரிசு வழங்கவேண்டும்'' என்றான்.

''ஓகோ! உனக்குப் பரிசு வேறு வேண்டுமா? உன் திறமையில் நீ தோற்று விட்டாயே! எப்படிப் பரிசு பெற முடியும்?''

''எப்பொழுது தோற்றேன்?''

''நீ பொய் சொல்பவன் என்ற உண்மையை இப்பொழுது சொல்லி விட்டாய் அல்லவா? எனவே உனக்குப் பரிசு கிடையாது'' என்றார்.

''நான் இப்பொழுது உங்களிடம் சொன்னது உண்மை என்று எப்படி உங்களுக்குத் தெரியும்? அதுகூட ஒரு பொய்தானே!'' என்றான்.

''அப்படியானால், இப்பொழுது சொன்னது?''

''பொய்!''

''உனக்குப் பரிசு கிடையாது போ. இப்பொழுது உண்மையைச் சொல்லி விட்டாய்!'' என்றார் தனவந்தர்.

—கெ. ராஜாமணி, சீகாழி.

பெரிய புளுகன்

'கீரன்'

காட்சி - 1

இடம்: மணியின் வீட்டு மாடி.
நேரம்: காலை.
பாத்திரங்கள்: மணி, ராஜி.

[மணி படித்துக்கொண்டிருக்கிருன். ராஜி ஓட்டமாக ஓடி வருகிருள்.]

ராஜி: மணி! மணி! சீக்கிரம் வாயேன்.

மணி: (திடுக்கிட்டு) என் ராஜி? என்ன சமாசாரம்?

ராஜி: கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் வெளியாகும்னு கேள்விப் பட்டிருக்கியா?

மணி: ஆமாம்.

ராஜி: ஆனல் நம்ம சிங்காரத்தின் குட்டெல்லாம் நாலே நாளைக்குள் வெளியாய்விட்டது.

மணி: மறுபடியும் பார்த்தாயா? மூடி மூடிப் பேசறயே!

ராஜி: சிங்காரம் வேலைக்கு வந்த அன்று நம்ம அப்பா ஒரு புஸ்தகத்தை அவனிடம் கொடுத்துப் போஸ்ட் செய்யச் சொன்னரே, நினைவிருக்கா?

மணி: ஆமாம். டில்லியிலே இருக்கிற சிநேகிதர் ஒருத்தருக்கு அனுப்பினர்.

ராஜி: அதேதான் - புஸ்தகத்தைக் கட்டி, விலாசம் எழுதி அதையும் ஒரு ரூபாய் பணத்தையும் சிங்காரத்தினிடம் கொடுத்தாரா?

மணி: இதிலே என்னவாம்?

ராஜி: அவசரப் படறயே! எப்பவும் அந்தப் புஸ்தகத்திற்கு ஆறணு ஸ்டாம்புதான் ஒட்டுகிற வழக்கமாம். எட்டணு என்று பொய் சொல்லி இரண்டணுவை அவன் எடுத்துக்கொண்டு விட்டான். அத்துடன் முதலுக்கே மோசம்!

மணி: அப்படி என்ருல்?

ராஜி: நாலுநாள் முன் அந்த நண்பரிடமிருந்து அப்பாவுக்கு வந்த கடிதத்திலே புஸ்தகம் கிடைக்கவில்லை என்று எழுதியிருந்தது.

மணி: தபாலில் தவறியிருக்கும்.

ராஜி: அதுதான் இல்லை. அதே புஸ்தகத்தை முந்தா நாள் நான் என் சிநேகிதி அநுபமா வீட்டிலே பார்த்தேன்.

மணி: ஆயிரம் காப்பி அச்சடித்ததிலே அது ஒரு காப்பியாக இருக்கலாம். டில்லிக்கு அனுப்பின புஸ்தகம்னு அதில் எழுதியிருந்ததோ?

ராஜி: ஆமாம். 'என் பால்ய நண்பர் கருணுகரருக்கு' என்று எழுதி அடியில் அப்பாவின் கையெழுத்தும் போட்டிருந்தது.

மணி: (ஆச்சரியத்துடன்) டில்லிக்கு அனுப்பின புஸ்தகம் அநுபமா வீட்டிலே எப்படி வந்ததாம்?

ராஜி: அதுதான் சிங்காரத்தின் அபார வேலை. இந்த விஷயத்தை நான் உடனே அப்பாவிடம் வந்து சொன்னேன். அப்பா இதை விசாரித்து உண்மையைக் கண்டுபிடிச்சார்.

மணி: என்னை கண்டுபிடிச்சார்?

ராஜி: பெரிய கடைத்தெருவில் உள்ள பழைய புஸ்தகக் கடையிலே புஸ்தகத்தைப் போட்டுக் காசு வாங்கிவிட்டான் சிங்காரம்.

ராஜி: ஊம். அந்தப் புஸ்தகக் கடைக்காரனுக்கு ஒரு ஸர்க்குலேடிங் லைப்ரெரி வேறே இருக்காம். அநுபமா வீட்டுக்குப் புஸ்தகம் எப்படி வந்ததென்று இப்போ புரிந்ததா?

மணி: அட அப்பாவி! திருடத் தெரிஞ்சாலும் தெத்தத் தெரியல்லையே! அப்பா கையெழுத்து இருக்கிற பக்கத்தைக் கிழிச்சிருக்கணும். (இருவரும் கலகலவென்று சிரிக்கிறார்கள்.)

ராஜி: அதில்லை, மணி. அன்றைக்கு அப்பா புஸ்தகத்தை எப்படி கிறுத்தாய், எப்படிப் போஸ்ட் செய்தாய் என்றெல்லாம் கேட்டதற்குச் சிங்காரம் எத்தனை வக்கணையாகப் பதில் சொன்னான் தெரியுமோ? அப்பா, பெரிய புளுகன்!

மணி: அப்புறம் என்ன?

ராஜி: நேத்து எம்பிராய்டரி நூல் வாங்கிவரச் சொன்னதற்குப் பத்தணா நூல்கண்டைப் பதினாலணா என்று பொய் சொல்லி நாலணா எடுத்துக்கொண்டான்.

மணி: சரிதான். பேஷ்! தேவலையே!

ராஜி: அது மட்டுமில்லை. தினசரி இவன் மார்க்கெட்டுக்குப் போய், காய்கறி வாங்கி வருவானல்லவா? அதிலே எகத் திருட்டு; அது இன்னிக்கு வெளியாய்விட்டது. அப்பா அவனை விசாரித்துக்கொண்டிருக்கார். அதைப் பார்க்கத்தான் உன்னைக் கூப்பிட்டேன். வா, கீழே போகலாம்.

(இருவரும் போகிறார்கள்.)

காட்சி - 2

இடம்: மணியின் வீட்டு ஹால்.
நேரம்: காலை.
பாத்திரங்கள்: கந்தசாமி, சிங்காரம், மணி, ராஜி.

கந்: (கடுமையான குரலில்) ஏண்டா சிங்காரம்! உன்னோடே மன்றாடிக்கொண்டிருந்தால் எனக்கு வேறே வேலை இல்லையா? சீக்கிரம் உண்மையைச் சொல்லு. நான் கொடுத்த அஞ்சு ரூபாய் நோட்டிலே கறிகாய் போக, மீதி எவ்வளவு சில்லறை கொண்டு வந்து மேஜை மேலே வைத்தாய்?

சிங்: மூணு ரூபாய் ஆறணாத் தாங்க.

கந்: இரண்டு ரூபாய் ஆறணாத் தானே இருக்கு?

சிங்: நான் மேஜை மேலேதான் வச்சேன்.

கந்: மேஜை மேலே வைத்தால் எங்கேடா போய்விடும்? ஒருகால் வழியிலே எங்கேயாவது.....?

சிங்: ஆமாம், ஆமாம். இப்போதான் நினைவு வறது. சில்லறையை மடியிலே வச்சுண்டிருந்தேன். இங்கே வந்து பார்த்தபோது மடி அவிழ்ந்திருந்தது. வழியிலேதான் விழுந்திருக்கும்.

கந்: (நகைப்புடன்) உம்.... ஒரு ரூபாய்தான் விழுந்ததோ இன்னும் அதிகம் விழுந்துவிட்டதோ! நீ ஒரு ரூபாய் பத்தணாவுக்கு என்னென்ன கறிகாய் வாங்கினாய்? விலைகளைச் சொல்லு.

சிங்: உருளைக்கிழங்கு அரை வீசை எழணா, வெங்காயம் அரை வீசை நாலணா, கத்தரிக்காய் அரை வீசை அஞ்சணா, தக்காளி அரை வீசை அஞ்சணா, முட்டைக் கோஸ் பத்தணா, இஞ்சி, பச்சை

மிளகாய், கொத்துமல்லி எல்லாம் ஒரு ரூபாய் பத்தணு.

கந்: (உள்ளடக்கிய ஆத்திரத்துடன்) நீ சொல்கிற கணக்கு இரண்டு ரூபாய்க்குமேலே போகிறதே! ஒரு சமயம் இன்னும் ஒரு ரூபாயைக் கறிகாய்க்காரனிடம் கொடுத்துவிட்டுச் சில்லறை வாங்க..?

சிங்: (ஏதோ நினைவு வந்தவன்போலத் துடிப்புடன்) ஆமாம். இப்போதான் நினைவு வறது. இதோ போய்ப் பாக்கிச் சில்லறையை வாங்கிக் கொண்டு வந்துவிடுகிறேன்.

கந்: (நகைத்துக்கொண்டே) நீ போனல் அவன் தருவானு?

சிங்: ம்...நான் அவனிடம்தான் வழக்கமாகக் கறிகாய் வாங்குவது. அவன் ரொம்பவும் நல்லவன். கொடுத்துவிடுவான்.

கந்: அவன் பெயரென்ன?

சிங்: நல்லப்பன்.

கந்: பேர் நல்லாய்த்தானிருக்கு. ஆனல் சிறு பையனை உன்னை ஏமாற்றிவிட்டானே! அவனை இன்றைக்குச் சும்மா விடக் கூடாது. நானும் மார்க்கெட்டுக்கு வருகிறேன் உன்னுடன்.

சிங்: (பதற்றத்துடன்) வேண்டாம், வேண்டாம். நீங்கள் வரவேண்டாம். நானே போய்ப் பாக்கிச் சில்லறையைக் கட்டாயம் வாங்கி வருகிறேன்.

கந்: சு! பேசாமல் புறப்படடா, கழுதை! உன் பித்தலாட்டமெல்லாம் யாரிடம்? உம். புறப்படு! இந்தா..இந்தக் கறிகாய்ப் பையையும் கையிலே எடுத்துக்கோ.. மணி!..ராஜி!..நான் இவனேடே மார்க்கட்டு வரையிலே போய் விட்டு வரேன். வீட்டைப் பார்த்துக்கொள்ளுங்கள்.

மணி, ராஜி: சீக்கிரம் வந்து விடுங்கள், அப்பா.

கந்: நல்லது.

(போகிறார்கள்)

காட்சி - 3

இடம்: மார்க்கட்டு.
நேரம்: காலை.
பாத்திரங்கள்: கந்தசாமி, சிங்காரம், நல்லப்பன்.

கந்: சிங்காரம்! யார் அந்த நல்லப்பன்?

சிங்: (நடுக்கத்துடன்) அதோ!..அவன்தான்.

நல்: வாங்க சாமி! என்ன வேணும்? எல்லாம் மலிவாய்த் தரேன். வாங்கிட்டுப் போங்க.

கந்: அப்பா கடைக்காரா! அரைவீசை உருளைக்கிழங்கு, அரைவீசை வெங்காயம், அரைவீசை கத்தரிக்காய், அரைவீசைத் தக்காளி, இருக்கிறதற்குள்ளே பெரிய முட்டைக் கோஸ் ஒண்ணு; இஞ்சி, பச்சை மிளகாய், கொத்துமல்லி எல்லாம் ஓரணு—ஆக எல்

லாம் சேர்த்து என்ன துட்டு ஆகி றது, சொல். வாங்கிக்கறேன்.

நல்: அட! இந்தப் பையன் கூட இப்போ இதே சாமான்களைத் தான் வாங்கிப்போச்சு. எல்லாம் சேத்து ஒரு ரூபா நாலணு ஆச்சு. அஞ்சு ரூவா நோட்டுக் கொடுத்து பாக்கி மூணே முக்கா ரூவா வாங் கிப் போச்சே!

கந்: நீ பாக்கி மூணே முக்கால் ரூபாயையும் கொடுத்தாயோ?

நல்: (அழுத்தமாக) ஓ! இம் மாம் பச்சைப் புள்ளை வந்தாலும் நாங்கள் சரியாத்தான் சாமீ நடந் துக்குவம். ஏமாத்த மாட்டோம். பையனையேதான் கேளுங்களேன், என் எதிராலே!..என் தம்பீ! காலையிலே நீ எங்கிட்டே பாக்கி எவ்வளவு வாங்கிப்போனே?

சிங்: (முணுமுணுப்பாக) மூ.. ணே...மு..க்..கா..ல்..ரூபாய்.

கந்: (புன்முறுவலுடன்) சரி. வா, வீட்டுக்குப் போகலாம். (நல் லப்பனை நோக்கி) அப்பா! நான் கறிகாய் வாங்கவரவில்லை. இந்தப் புளுகை விசாரிக்கத்தான் வந் தேன். நான் போய் வருகிறேன்.

நல்: போய்வாங்க, சாமீ!



காட்சி - 4

இடம்: கந்தசாமி வீடு.
நேரம்: காலை.
பாத்திரங்கள்: கந்தசாமி, சிங்காரம், மணி, ராஜி.

கந்: மணி!..ராஜி!...

மணி: (வந்துகொண்டே) இதோ வந்துட்டேன் அப்பா.

மணி: (பரபரப்புடன்) என்ன அப்பா? பணம் கொடுத்தானா?

கந்: அவனிடம் பாக்கியிருந்தாலல்லவா கொடுப்பதற்கு? எல்லாம் இந்தப் பயல்தான் அமுக்கியிருக்கிறான். புளுகை மூதறிக்கிறபோது திருதிருன்னு விழிக்கிறான்.

மணி: பேஷ்! தேவலையே!

ராஜி: (குதூகலத்துடன்) அப்பா! அப்பா! என் சோப் பாக்ஸ் அகப்பட்டுப் போச்சு அப்பா! இதோ பாருங்கள், அப்பா!

கந்: (அதை வாங்கித் திறந்து) இதிலே ஏது ரூபாய்? ஏ அப்பா! ஆறரை ரூபாயிருக்கே! ஏண்டா சிங்காரம்! இது ஏது தெரியுமா?

சிங்: (அழுதுகொண்டே) நான் தான்...வச்சேன்..தினம் திருடியது, கணக்கில் விட்டுப்போன ஒரு ரூபாய் எல்லாம். சத்தியமா இனிமே திருடல்லே.

கந்: இப்போ உன்னைப் போலீசில் ஒப்பிக்கட்டுமா?

ராஜி: (இரக்கத்துடன்) போனாப் போறான் அப்பா. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளுக்குள்ளேயே வெளியாகிவிட்டது. இனிமேல்தான் ஒழுங்காய் இருக்கிறேன் என்கிறானே!

மணி: ஆமாம் அப்பா! ஏழை!

கந்: ஏழையானால் என்ன; பணக்காரனானால் என்ன? பொய் சொல்வதென்பது கூடவே கூடாது. உங்களுக்கும் இதே பாடம்தான். என்ன?

மணியும் ராஜியும்: சரிதான் அப்பா.

கந்: சரி, போங்கள். சிங்காரம்! இனி நல்ல முறையில் நடந்து கொள்.

சிங்: அப்படியே!

(திரை)

ஓர் இரவு

ப. ரா.

இரவு மணி எட்டிருக்கும். நல்ல இருட்டு. சில்லென்று வீசிய பனிக்காற்றுக்கு அஞ்சித் தெரு நாய்கள்கூட இருக்குமிடம் தெரியாது முடங்கிவிட்டன. வீதிகளில் நிச்சப்தம் நிலவியது. அநேகமாக எல்லா வீடுகளின் வாயிற் கதவுகளும் மூடித்தான் இருந்தன.

அப்படிப்பட்ட வேளையிலே உச்சி முதல் உள்ளங்கால் வரை வேஷ்டியால் போர்த்துக்கொண்டும் குளிர் தாங்காமல் உடலெல்லாம் நடுங்கியபடி, தெருவில் நடந்து வந்தது ஓர் உருவம். அது பின்னால் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாக வந்துகொண்டிருந்தது. தெருக்கோடியில் ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்துக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்த ரோந்துப் போலீஸ்காரன் மட்டும் இவ்வுருவத்தைக் கவனித்திருந்தால் கட்டாயம் துரத்தி வந்திருப்பான். கடைசியில் தான் துரத்திப் பிடித்தது கேவலம் மூன்றாவது பாரம் படிக்கும் மாணவன் சுந்தரம்தான் என்று கண்டு பெருத்த ஏமாற்றம் அடைந்திருப்பான். அப்பாவின் பெட்டியிலிருந்து ஐந்து ரூபாய் நோட்டைத் திருடிக்கொண்டு, நாடகம் பார்க்கப்போகும் பையனைக் கோர்ட்டில் ஆஜர் செய்யும் அதிகாரமாவது உண்டா?

வீதியின் மறு கோடியிலே ஒரு வீட்டெதிரே நின்று மெதுவாய்ச் சீட்டியடித்தான் சுந்தரம். அதற்குப் பதில் குரல் கொடுப்பதுபோல் வேறு யாரோ சீட்டியடிப்பது கேட்டது. மறுநிமிஷம் அந்த வீட்டின் கதவை மெல்லத் திறந்து கொண்டு ஒரு பருத்த சிறுவன் வெளியே வந்தான். தெருவின் எதிர்சாரியில் இருளோடு இருளாய் மறைந்து நின்ற சுந்தரத்தை அவன் கண்கள் ஒரே நொடியில் கண்டு கொண்டன. அதற்குள் சுந்தரமும் வீதியைக் கடந்து அவனருகில் வந்து சேர்ந்தான்.

''என்னடா கணபதி, தயார் தானே?'' என்றான் சுந்தரம்.

''ஒ எஸ்'' என்று பதில் வந்தது.

''காசு ஏதாவது பெயர்ந்ததா?'' என்பது அடுத்த கேள்வி.

''உம்..உம் மூன்று ரூபாய்'' என்று கணபதி முனகினான்.

''பரவாயில்லையடா. என்னிடம் ஐந்து ரூபாய் இருக்கிறது. மொத்தம் எட்டு ரூபாய்; யதேஷ்டம்... சரி, நட சீக்கிரம். இன்னும் ஒரு மணி நேரத்துக்குள் ஐந்து மைல் தூரம் தாண்டியாகவேண்டும்'' என்று அவசரமாக முன் நடந்தான் சுந்தரம். கணபதி மௌனமாகப் பின் தொடர்ந்தான். அந்தக் காரிருளில் எப்படித்தான் வழி தெரிந்து வேகமாய் நடந்தார்களோ, கடவுளுக்குத்தான் தெரியும்!

இருட்டில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொள்ள முடியாவிட்டாலும், விடுதலை உணர்ச்சி

யும் குதூகலமும் இரு உள்ளங்களிலும் நிரம்பி வழிந்தன. இன்னும் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் இருவரும் ஜோராக நாடகம் பார்த்துக்கொண்டிருப்பார்கள்; அதுவும் முதல் வரிசை சோபாக்களில்! சூடான டீயைக் குடித்துவிட்டு வெற்றிலை பாக்குப் போட்டுக்கொள்ளப் போகிறார்கள்! ஏன், சுந்தரம் இன்று முதல் தடவையாக ஒரு சிகரெட்டை வாங்கி, 'தம்' அடித்துப் பார்ப்பதென்று கூடத் தீர்மானித்திருந்தான்.

"ஏண்டா சுந்தரம், உன்னை ராத்திரி வீட்டில் காணவிட்டால் தேட மாட்டார்களா?" என்று கணபதி கேட்டான்.

"ஆமாம், அம்மா தேடத்தான் தேடுவாள்" என்று பதிலளித்தான் சுந்தரம்.

"என்னடா, ரொம்ப நிதானமாகச் சொல்கிறாயே. பிள்ளையைக் காணுமென்று தாயார் கூச்சல் போட்டு அப்பாவை எழுப்பிவிட்டு, அப்புறம் இரண்டு பேருமாகச் சேர்ந்து ஊரைக் கூட்டி ஏகக் கலாட்டா செய்துவிட்டால் என்னடா செய்வது?" என்று சொல்லும்போதே கணபதியின் உற்சாகமெல்லாம் எங்கோ ஓடி மறையத் தலைப்பட்டது.

"கணபதி, நீ எதற்கு வீணாகப் பயப்படுகிறாய்? என் அப்பா ஊரில் இல்லை. அம்மா மட்டும்தான் வீட்டில் தூங்குகிறாள். நடுவில் விழித்துக்கொண்டால்கூட அத்தனை கலாட்டா செய்யமாட்டாள். எங்கே போயிருந்தாலும் காலையில் காப்பி சாப்பிடுவதற்கு நான் வீட்டுக்குத் திரும்பி வந்து விடுவேனென்று அவளுக்குப் பூரண நம்பிக்கை உண்டு" என்று சுந்தரம் விவரித்தான்.

"பரவாயில்லையடா உன் பாடு. நான் அகப்பட்டுக் கொண்டால்தான் பெரிய அவஸ்தை. இருந்தாலும் என்ன செய்வது? டிராமா பார்த்தாக வேண்டுமே. எங்கப்பாவுக்குத் தெரிந்துவிட்டால் என் சிண்டைப் பிய்த்துவிடுவார்டா!" என்று கணபதி அழாக்குறையாகச் சொல்லிப் பெருமூச்சு விட்டான்.

"போடா, போடா, உன் தலையில் சிண்டு இருந்தால்தானே பிய்ப்பதற்கு......?" என்றான் சுந்தரம்.

"இந்தப் பெரியவர்களுக்கு மரியாதை கொடுத்தால் அதைக் காப்பாற்றிக்கொள்ள அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் கண்ணில் மண்ணைத் தூவி விட்டுப் போவதுதான் சரியான வழி என்று துணிந்து விட்டேன். அப்போதுதான் நீ வந்து நாம் இரண்டு பேரும் சேர்ந்து போகலாமென்று சொன்னாய். கிளம்பியும் ஆயிற்று. இப்போது பாதி தூரம் வந்த பிறகு...."

"மனசு அடித்துக் கொள்கிறதாக்கும்?"

"ஆமாண்டா சுந்தரம், என்ன இருந்தாலும், நாம் செய்வது..."

"டேய் கணபதி, நீ பார்ப்பதற்குத்தான் கடோத்கஜன் மாதிரி வளர்ந்திருக்கிறாயே தவிர, சுத்தக் கோழைடா. முன் வைத்த காலைப் பின் வைப்பதாவது! வெட்கக் கேடான காரியம்! இந்தப் பயத்தை உதறித் தள்ளு. பகவான் மேல் பாரத்தைப் போடு. நாடகம் பார்த்துவிட்டுப் பொழுது விடியுமுன் நேரே அவரவர் வீட்டுக்குள்ளே புகுந்து, சத்தம்

செய்யாமல் படுக்கையில் விழ வேண்டியது. இல்லை, அதற்குள் ஏதாவது களேபரம் ஆகியிருந்தால், உண்மையை ஒப்புக்கொண்டு வந்ததை அநுபவிக்க வேண்டியது. எப்படியானாலும் டிராமாவைப் பார்த்து விடவேண்டியது'' என்று சுந்தரம் ஆர்ப்பரித்தான்.

ஆனால் கணபதி அந்த வீரதீரமான பேச்சைக் கேட்டு மீண்டும் உற்சாகமடைந்தான். 'வருவது வரட்டும்' என்ற பழைய தைரியம் அவன் நெஞ்சில் குடிகொண்டது. மந்த நடையில் விறுவிறுப்பேறியது.

இரு சிறுவர்களும் நாடகம் பார்க்கத் தம் தம் வீட்டில் சொல்லிக்கொள்ளாமல் கிளம்பினதுமல்லாமல், அங்கிருந்து ரூபாயை வேறு திருடிக்கொண்டு வந்திருந்தனர். இருளையும் பனிக் காற்றையும் லட்சியம் செய்யவில்லை. இத்தனைக்கும் அது ஓர் 'அமெச்சூர்' சபையினரின் நாடகம்.

ஏதாயிருந்தாலென்ன? நாடகம் நாடகம்தானே?

தூரத்தில் டிராமாக் கொட்டகையின் விளக்குகள் பிரகாசமாய் எரிவதைக் கண்ணுற்றதும் சுந்தரமும் கணபதியும் விவரிக்க இயலாத மகிழ்ச்சியுற்றனர். கொட்டகையை நோக்கி அவர்கள் ஓடின ஓட்டத்தில் இடறி விழுந்து போலீஸ்காரனுடன் மோதிக்கொண்டு, ஜட்கா வண்டி ஒன்றின் கீழ் மாட்டிக்கொள்ளாமல் தப்பி, கூட்டத்தில் முண்டியடித்துக்கொண்டு நுழைந்து அநுபவித்த கஷ்டங்களெல்லாம், முதல் ஸீன் தூக்கியதும் கனவு போல் விலகின. முதல் வரிசையில் மூன்று ரூபாய் சோபாவில் 'ஜம்'மென்று சாய்ந்துகொண்டு காட்சியை ரஸித்தனர்.

நாடகம் முடியும்போது மணி இரண்டுக்கு மேலாகி விட்டது. கொட்டகையை விட்டு வெளியே வரும்போது இருவருக்கும் நல்ல

தூக்கக் கலக்கம். பனி வேறு கொட்டிக்கொண்டிருந்தது. மேலும், பொழுது விடிந்து இருள் பிரியுமுன் அவர்கள் தம் தம் வீடுகளில், அதுவும் படுக்கைகளில் இருக்க வேண்டுமே!

பல்லைக் கடித்துக்கொண்டு கிராமத்தை நோக்கி நடக்கத் தொடங்கினர். குளிரில் உடல் நடுங்கியது. வானத்தில் பிறைச் சந்திரன் மட்டும் தோன்றித் தன் மங்கலான ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தான். நாடகம் பார்க்கச் செல்லும் போதிருந்த உத்ஸாகம் இப்போது இருவரிடமும் காணப்படவில்லை. தூக்கக் கலக்கம், எலும்புவரை பாய்ந்து வதைக்கும் குளிர்காற்று, எல்லாவற்றிற்கும் மேலாகப் பயம்-இவை ஒருங்கு சேர்ந்து அவர்களை வாட்டின.

''டேய் சுந்தரம், நான் அப்போதே சொன்னமாதிரி, பேசாமல் திரும்பிப் போயிருந்தால் நன்றாயிருந்திருக்குமடா'' என்று கணபதி முனகினன்.

சுந்தரத்துக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. ''ஆமாம், அதற்கு இப்போது என்னடா செய்ய வேண்டுமென்கிருய்?'' என்று சீறினன் அவன்.

கணபதி கண்ணீர் விடத் தயாராயிருந்தானே யன்றிச் சண்டை போடும் நிலைமையில் இல்லை. இருவரும் மௌனமாக இன்னும் சிறிது தூரம் நடந்தனர்.

ஒரு மைல் தூரம் நடந்திருப்பார்கள். அதற்குள் பின்னுவிருந்து 'பூம் பூம்' என்ற ஹார்ன் சப்தம் கேட்டது. நண்பர்கள் ரோட்டின் ஓரம் ஒதுங்க முயல்வதற்குள் வாயுவேகமாகப் பறந்து வந்த ஒரு 'ஜீப்' கார் அவர்களருகே நின்றது. கரிய உடையும் முகமூடியும் தரித்து அதிலிருந்து குதித்த இரு உருவங்களைக் கண்டதும் கணபதியும் சுந்தரமும் மெய்விதிர்த்துப் போயினர். அவர்களது கால்களினடியிலிருந்து பூமியே நழுவுவது போல் தோன்றியது.

''அடே பயல்களா? யார் நீங்கள்?'' என்றது ஓர் உருவம். அதன் கையில் ஒரு பயங்கரமான பிஸ்டல்; மற்ற உருவத்தின் கையில் ஒரு கூரிய கத்தி. கணபதி ஓவென்று கதறத் தொடங்கி விட்டான். ''ஐயோ, எங்களை ஒன்றும் செய்யாதீர்கள். நாங்கள் பள்ளிக்கூடத்துப் பையன்கள். டிராமா பார்க்கத்தான் வந்தோம்'' என்று அலறினன் சுந்தரம்.

''உஷ்—சத்தம் கித்தம் போட்டால் தொலைத்துவிடுவோம் பயல்களா. நாங்கள் திருடர்கள், ஜாக்கிரதை!'' என்று எச்சரித்தது கத்தி பிடித்த உருவம்.

''உண்மையைச் சொல்லுங்கள். வீட்டில் சொல்லிக் கொள்ளாமல் தானே கிளம்பி வந்தீர்கள்?'' என்று துப்பாக்கித் திருடன் அதட்டிக் கேட்டான்.

''ஆமாம்—'' என்று இருவரும் கண்ணீர் வடித்தபடி ஒப்புக் கொண்டனர்.

''அப்படியானல், உனக்குக் காசு ஏது?'' என்று சுந்தரத்தைக் கேட்டான் திருடன்.

''அம்மாவின் பெட்டியிலிருந்து ஐந்து ரூபாய் திருடினேன்....''

''உனக்கு....?''

''பாடப் புத்தகங்களை விற்று மூன்று ரூபாய் சேர்த்தேன்.''

''திருட்டுப் பயல்களா!'' என்று வாய்கூசாமல் அவர்களை வைதான் அந்தப் பெரிய திருடன்.

"ஐயா, எங்களை விட்டு விடுங்கள். எங்களிடம் மிச்சமிருக்கும் சில்லறையையெல்லாம் உங்களுக்குத் தந்துவிடுகிறோம்..." என்று சுந்தரம் கெஞ்சினான். அதைக் கேட்டதும் பிஸ்டல் வைத்திருந்தவன், "அப்பனே, அதெல்லாம் நடக்காது. மோட்டார் வைத்துக்கொண்டு திருட்டு நடத்துபவர்களுக்கு உங்களிடம் சில்லறை வாங்கினால் கட்டுபடியாகுமா? ஏறுங்கள் இந்த 'ஜீப்'பில். சத்தம் கித்தம் போட்டால், தெரியுமா சமாசாரம்?.. உம்...."

"ஐயையோ! எங்களை எங்கே கொண்டு போகப்போகிறீர்கள்?" என்று சுந்தரம் கத்தினான்.

"உங்களைக் கொண்டுபோய் எங்கள் மலைக் குகையில் சிறை வைக்கப்போகிறோம். உங்கள் பெற்றோர் தலைக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்தாலொழிய, நீங்கள் உயிருடன் வீடுபோய்ச் சேர முடியாது. தெரிந்ததா?"

"அட தெய்வமே! ஆயிரம் ரூபாயா?" என்று சுந்தரமும் கணபதியும் கேட்டார்கள்.

"ஆமாம். அவர்களுக்குத் தம் பிள்ளைகள் வேண்டுமானால், எப்படியாவது பணத்தைக் கொண்டு வரத்தான் வேண்டும். எய், சோமு, இவர்கள் கண்களைக் கட்டி வாயில் துணியை அடை" என்று தன் கூட்டாளிக்கு உத்தரவிட்டான், அந்த முதல் திருடன். அடுத்த சில கணங்களில் இரு சிறுவர்களும் கண்களும் கைகளும் கட்டப்பட்ட நிலைமையில் வண்டிக்குள்ளே தள்ளப்பட்டனர். ஒரே பயமும் பீதியும் அந்த இளம் உள்ளங்களை வாட்டி எடுத்தன.

"இந்தாருங்கள், என் கையைப் பிடித்துக்கொண்டு வாருங்கள். கூட்டத் தலைவன் முன்னால்தான் உங்கள் கண் கட்டுகளை அவிழ்க்க வேண்டும்" என்றான் ஒரு திருடன் வண்டி நின்றதும்.

நீட்டப்பட்ட அந்தக் கையைப் பிடித்துக்கொண்டு சுந்தரம் நடக்க, சுந்தரத்தின் வேஷ்டி நுனியைப் பிடித்துக்கொண்டு கணபதியும் தொடர்ந்தான்.

அங்கே பாட்டும் கூத்துமாக ஒரே ஆரவாரம் கேட்டது. சற்று முன் நாடகத்தில் பாடப்பட்ட சில பாட்டுகள் கூட இந்தக் கள்ளர் குகையில் ஒலித்ததுதான்

வியப்பாக இருந்தது.

'நீங்கள் யார் முன் நிற்கிறீர்கள், தெரிகிறதா?'' என்று உரத்த குரலில் கேட்டான், அவர்களைப் பிடித்து வந்த திருடன்.

''தெரியும். கள்ளர் தலைவன் முன் நிற்கிறோம்'' என்று சுந்தரம் ஈனஸ்வரத்தில் பதில் சொன்னான். சுற்றிலுமிருந்து கொல்லென்று சிரிப்பு ஒலி கிளம்பியது. இதைத் தொடர்ந்து ஒரே நொடியில் சிறுவர்களது கண்கட்டுகள் அகற்றப்பட்டன.

என்ன ஆச்சரியம்? சாந்தமும் பரிதாபமுமே உருவாய்ச் சுந்தரத்தின் தகப்பனார்தான் அங்கு நின்றார்.

கணபதியும் சுந்தரமும் தம் பார்வையை நாற்புறமும் ஓட்டினர். அருகில் முகமூடியைக் கழற்றி யெறிந்து விட்டுக் கறுப்பு உடையையும் களைந்து கொண்டிருந்த இரு உருவங்கள் அவர்களைப் பார்த்துப் புன்னகை செய்தன. ''தம்பி, நாங்கள் உங்களை ரொம்பப் பயமுறுத்தி விட்டோமில்லையா?'' என்று கேட்பது போலிருந்தது அந்தப் புன்னகை.

''சுந்தரம், என்னடா விழிக்கிறாய்? இவர்களெல்லாம் என் பால்ய நண்பர்கள். இது தான் நடிகர்களது 'கிரீன் ரூம்'—அதாவது நடிகர்கள் வேஷம் போட்டுக் கொள்ளும் அறை'' என்றார் சுந்தரத்தின் அப்பா.

''இதோ பார், இப்படி அசட்டு விழி விழிக்காதே. இன்று சாயங்காலம்தான் நான் பூதலூரிலிருந்து இங்கு வந்திறங்கினேன். பஸ் ஸ்டாண்டில் இந்த நண்பர்களைச் சந்தித்ததும், இன்றிரவு டிராமா நடை பெறவிருக்கும் விவரம் தெரிந்தது. 'கிரீன்ரூமி'ல் ஒத்தாசைக்கு ஆள் தேவையாயிருந்தபடியால் என்னை இங்கேயே தங்கும்படி கேட்டார்கள். நானும் ஒப்புக் கொண்டேன். டிராமா நடக்கும் பொழுது தற்செயலாய் வெளியில் வந்தபோது உங்களைப் பார்த்தேன். ஆனால் இடையில் உங்களைக் காபரா படுத்த வேண்டாம் என்று போய் விட்டேன். எனக்கு அப்போதே தெரியும், நீ வீட்டில் காசைத் திருடிக்கொண்டு சொல்லாமல்தான் வந்திருப்பாய் என்று. டிராமா முடிந்ததும் தேடிப் பார்த்தால் ஆளைக் காணோம்! இருவரும் மெல்ல நழுவி இருப்பீர்களென்று ஊகித்து, இந்த இரு நண்பர்களையும் காரில் அனுப்பினேன்..'' என்று சுந்தரத்தின் தகப்பனார் சொல்லிக் கொண்டே போனார்.

''நாங்களும் சும்மாவா போனோம்? கிரீன் ரூமிலிருந்து திருடன் டிரஸ்ஸை எடுத்து மாட்டிக்கொண்டு போய் இந்த வாண்டுப் பயல்களைத் திணற அடித்தல்லவா கொண்டுவந்தோம்?'' என்று மார் தட்டினார் 'ஜீப்'பில் வந்த நண்பர்களில் ஒருவர்.

சுந்தரமும் கணபதியும் உண்மை புரிந்ததும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

நடிகர்களுக்கு என்று ஸ்பெஷலாய் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இட்லி சாம்பாரில் இவர்களுக்கும் பங்கு கிடைத்தது. அதன் பின் சுந்தரத்தின் தகப்பனாருடன் அதே 'ஜீப்பில்' ஏறிக் கிராமத்துக்கு வந்து சேர்ந்தனர். இரவில் பையன்கள் பட்ட பாட்டைக் கேட்ட பின் கணபதியை அடிக்க அவன் தந்தைக்கு எப்படி மனம் வரும்?

மறதி

என். எஸ். ஸ்ரீநிவாஸன்

"அதுதான் எடுத்துக்கொண்டு போயிருக்கிறது."

"நன்ருகத் தேடிப் பாருங்கள்."

"இன்னும் எப்படித் தேடச் சொல்லுகிருய்? பெட்டியில்தான் வைத்திருந்தேன். நன்ருக ஞாபகம் இருக்கிறது. அதில் இல்லை. பர்ஸிலும் இல்லை. வேறு எங்கே, கால் முளைத்தா போய்விடும்? நிச்சயமாக அந்தப் பயல்தான் எடுத்துக்கொண்டு போயிருக்கிருன்."

"ஏதாவது வேண்டுமென்ருல் அழுது பிடிவாதம் பிடிக்குமே தவிர, தெரியாமல் இப்படித் துணிச்சலாக எடுத்திருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. உங்களுக்கும்தான் ஞாபகசக்தி கிடையாது. நன்ருகத் தேடிப் பாருங்கள்."

"உனக்கு ஒன்றுமே தெரியாது. பசங்கள் பட்டாசு என்ருல், எதை வேண்டுமானுலும் செய்வார்கள். போதாக்குறைக்கு, கோடிவீட்டுத் 'தறிதலை' ஒன்று இருக்கிறதே, அதனுடன் சிநேகம் வைத்துக்கொண்டிருக்கிருன். நான் சொல்கிறேன், வேண்டுமானுல் பார். அதுதான் எடுத்திருக்கிறது. அன்று பேஞ காணுமற்போனது, அதற்குமுன் ரிஸ்ட்வாச் காணுமற்போனது, எல்லாம் இவன்தான் எடுத்திருக்கிருன். திருட்டுப் பயல், வரட்டும், திருடும் அந்தக் கையை நொறுக்கிவிட்டு மறுவேலை பார்க்கிறேன்" என்று ரங்குவின் தகப்பனுர் பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டிருக்கையில், ரங்கு அங்கே வந்து சேர்ந்தான்.

"என்னடா செய்தாய், அந்த ரூபாயை எடுத்து?" என்ருர் ரங்குவை நோக்கி.

"எந்த ரூபாயை?" என்று பேந்தப் பேந்த விழித்தான் ரங்கு.

"பெட்டியில் இருந்த ரூபாயை."

"பெட்டியில் இருந்த ரூபாயையா? எனக்கென்ன தெரியும்?"

"பிச்சுவிடுவேன் பிச்சு. அந்த ஏமாற்று வித்தையெல்லாம் இங்கு ஒன்றும் பலிக்காது. நல்லதனமாக உண்மையை ஒப்புக்கொண்டால் பிழைத்தாய். இல்லாவிட்டால்.. ஆமாம்" என்று கண்களை ஓர் உருட்டு உருட்டினுர்.

"நிஜமாகவே எனக்கு ஒன்றும் தெரியாது, அப்பா!" என்ருன் ரங்கு.

இதற்குள்ளாக ரங்கு பின் பக்கமாகக் கையில் ஏதோ பொட்டலம் வைத்திருந்ததைப் பார்த்துவிட்டு, "என்னது அது கையில்?" என்ருர்.

"பட்டாசுப் பொட்டலம்" என்ருன் அவன்.

அவ்வளவுதான். அவருடைய கோபம் முன்னைவிடப் பல மடங்கு அதிகமாகிவிட்டது.

"பார்த்துக் கொள்! நான் சொன்னுல் அப்படியெல்லாம் இருக்காது என்று சொன்னுயே. இதற்கு என்ன சொல்லுகிருய்?" என்று ரங்குவின் தாயாரை நோக்கிச் சொல்லிவிட்டு, "எது அந்தப்

பட்டாசு?'' என்றார் ரங்குவை நோக்கி.

''கோடிவீட்டுக் கோபு கொடுத்தான்'' என்றான் ரங்கு.

''ஓஹோ, இது யாரை ஏமாற்றுகிற வித்தை? இப்பொழுதும் பரவாயில்லை. உண்மையைச் சொல், விட்டு விடுகிறேன். இல்லையென்றால் முதுகு 'தப்பட்டை'த் தோலாகி விடும். ஜாக்கிரதை!'' என்று ஓர் உறுமல் உறுமினார்.

''உண்மையாகத்தான் சொல்கிறேன் அப்பா! நீங்கள் வேண்டுமானால் அவனையே கேட்டுப் பாருங்களேன், அவன் நிறையப் பட்டாசு வாங்கினான். நான் கூட இருந்தேன். எனக்கும் கொடுத்தான்.''

''இத்தனை பட்டாசு அவன் உனக்கு இனாமாகக் கொடுத்து விட்டானா? யாரை ஏமாற்றுகிற கதை இது?'' என்று சொல்லிவிட்டு, ''பார்த்தாயல்லவா அவன் முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கிற கதையை? பெட்டியிலிருந்து பணத்தை எடுத்துப்போய் இருவருமாகச் சேர்ந்து வாங்கிக்கொண்டுவந்திருக்கிறார்கள். எனக்குத் தெரியுமே, இவன் என்று கோபுவுடன் சிநேகம் செய்ய ஆரம்பித்தானோ அன்றே குட்டிச் சுவராகப் போய் விட்டானென்று'' என்றார் ரங்குவின் தாயாரைப் பார்த்து.

''இல்லையப்பா! நிஜமாக அவன்தான் வாங்கிக் கொடுத்தான்'' என்றான் ரங்கு.

''பெட்டியிலிருந்து பணத்தை எடுத்துக்கொண்டு போய்ப் பட்டாசு வாங்கினதுமல்லாமல் பொய் வேறா? திருட்டுப் பயல்! என்ன துணிச்சலடா உனக்கு?'' என்று சொல்லி நறுக்கென்று ஒரு குட்டுக் குட்டினார் அவன் தலையில்.

வலி பொறுக்க முடியாமல் குட்டின இடத்தைக் கையால் அழுத்திக்கொண்டு, ''அவன்தான் அப்பா, வாங்கிக் கொடுத்தான். வேண்டுமானால் போய் அவனைக் கேட்டுப் பாருங்கள். அப்பொழுது தெரியும் நான் சொல்வது சரியா, தவறா என்று'' என்றான் ரங்கு.

''கேட்காமலா விடப் போகிறேன்? கேட்கத்தான் போகிறேன். அத்துடன் அவன் தகப்பனாரிடமும் சொல்லி அவன் தோலை உரிக்கப் போகிறேன். அயோக்கியப் பயல்கள்!'' என்று

சொல்லி ரங்குவின் தலையில் இன்னொரு குட்டுக் குட்டிவிட்டு நேராகக் கோபுவின் வீட்டுக்குப் போனார்.

இவர் வரும் வேகத்தைப் பார்த்து, வீட்டு வாசலில் நின்றிருந்த கோபுவின் தகப்பனார், "வாங்கோ, நானே ஒரு வேலையாய் உங்களிடம் வரவேண்டும் என்றிருந்தேன். ஏதோ அவசரம் போல் தெரிகிறதே" என்றார்.

"உங்கள் பையன் கோபு எங்கே?" என்றார்.

"ஏன், உள்ளே இருக்கிறான். கூப்பிடட்டுமா?"

"ஏன், என்ன சமாசாரம்?"

"ரங்குவைப் பெட்டியிலிருந்து பணம் எடுத்து வரச் சொல்லியிருக்கிறான். அவன் கொண்டு வந்து கொடுத்திருக்கிறான். இருவரும் போய்ப் பட்டாசு வாங்கி வந்திருக்கிறார்கள். எப்படியிருக்கிறது நியாயம்?"

"என்னது? கோபு என்னிடம் வேறு பணம் வாங்கிக்கொண்டு போனானே?" என்று சொல்லி விட்டு, "டேய் கோபு!" என்றார் கோபுவின் தகப்பனார்.

கோபு வந்தான்.

"பட்டாசு வாங்குவதற்கு ரங்குவைப் பணம் கொண்டு வரச் சொன்னாயா?" என்றார் கோபுவை நோக்கி அவனுடைய தகப்பனார்.

"இல்லையே!"

"பின்னே ரங்கு பட்டாசு வைத்திருந்தானே அது ஏது கேளுங்கள்" என்றார் ரங்குவின் தகப்பனார்.

"நான் கொடுத்தேன் அப்பா, அவனுக்கு" என்றான் கோபு.

"இதெல்லாம் முன் ஏற்பாடு. அதுவும் இந்தக் காலத்துப் பசங்களுக்குச் சொல்லியா கொடுக்க வேண்டும்? நீங்கள் எவ்வளவு கொடுத்தீர்கள்? அவர்கள் எவ்வளவுக்கு வாங்கினார்கள் கேளுங்கள்" என்றார் ரங்குவின் தகப்பனார்.

"நீங்கள் இரண்டு ரூபாய் கொடுத்தீர்களா? அவ்வப்போது நான் சேர்த்து வைத்தது மூன்று ரூபாய். ஆக ஐந்து ரூபாய்க்கு வாங்கினேன். அதில் ரங்குவுக்குக் கொஞ்சம் கொடுத்தேன்" என்றான் கோபு.

"பார்த்தீர்களா? சேர்த்து வைத்ததாகச் சொல்வது தவறு. மிட்டாய், பெப்பர்மிண்ட் வாங்குவதை விட்டு விட்டு, சேர்த்துக் கூட வைக்கத் தோன்றுமா? அதெல்லாம் சுத்தப் பொய்" என்றார் ரங்குவின் தகப்பனார்.

கோபுவின் தகப்பனாருக்கும் சந்தேகம் வந்துவிட்டது. கோபுவை நாலு அறை அறைந்தார்.

ரங்குவின் தகப்பனார் வீட்டுக்கு வந்ததும், "என்ன சமாசாரம்?" என்று கேட்டாள் ரங்குவின் தாயார்.

"சமாசாரம் என்ன? எல்லாம் நான் சொன்னதுதான்" என்று அவர் சொல்லிக்கொண்டிருக்கையில், "எதிர்பார்த்த மணியார்டர் வந்துவிட்டது. இந்தாருங்கள் காலையில் நீங்கள் கொடுத்த ஐந்து ரூபாய்" என்று நான்காவது வீட்டு நாகராஜன் ரங்குவின் தகப்பனாரிடம் ஐந்து ரூபாயைக் கொடுத்துவிட்டுப் போனார்.

"ஏது இது?" என்றாள் ரங்குவின் தாயார்.

"ஆமாம். காலையில் நாகராஜன் ஐந்து ரூபாய் கடன் வாங்கிக் கொண்டு போனான். ஞாபகமே இல்லை" என்று தலையைச் சொறிந்தார் ரங்குவின் தகப்பனார்.

"நான்தான் அப்பொழுதே சொன்னேனே, உங்களுக்கு ஞாபகசக்தி கிடையாது என்று" என்றாள் ரங்குவின் தாயார்.

இவ்வளவு நேரம் தலையைக் கவிழ்ந்து அழுதுகொண்டிருந்த ரங்கு தலையை நிமிர்த்தினான். ஆனால், 'தீபாவளி சமயத்தில் வீட்டில் எதாவது பணம் காணாமற் போய்விட்டால் பசங்கள் மீது தான் சந்தேகம் வரும். ஆகவே அந்தச் சமயத்தில் யாராவது இனாமாக வாங்கிக் கொடுத்தால் கூடப் பெற்றோர்களுக்குத் தெரியாமல் அதை வாங்கிவரக் கூடாது' என்று அவன் எண்ணினான்.

"பாவம்! வீணாக்காவது அவசரப்பட்டு விட்டேன். அத்துடன் நாம் வாங்கிக் கொடுக்காமற் போகவே தானே கோபுவினிடம் அவன் இனாம் வாங்கி வந்திருக்கிறான்? நாம் வாங்கிக் கொடுத்திருந்தால் அவன் மனது எவ்வளவு சந்தோஷப் பட்டிருக்கும்? எத்தனையோ வீண் செலவு செய்கிறோம். குழந்தைகள் தங்கள் உயிருக்கும் மேலாகக் கருதும் பட்டாசை வாங்கிக் கொடுக்காமல் இருப்பது பிசகுதான்" என்று அதே சமயத்தில் ரங்குவின் தகப்பனார் நினைத்தார்.

உடனே அவர் ரங்குவைக் கடைக்கு அழைத்துச் சென்று நாகராஜன் கொடுத்துச் சென்ற ஐந்து ரூபாய்க்கும் பட்டாசு வாங்கிக் கொடுத்தார்.

பார்க்க வேண்டுமே, ரங்குவின் வீட்டில் தீபாவளியை!



பலே மந்திரி

முன்னொரு காலத்தில் ஒரு பெரிய ராஜ்யத்தை ஓர் அரசன் ஆண்டுவந்தான். அவனுக்கு ஒரு மந்திரி இருந்தான். ராஜாவின் வார்த்தைகளுக்கு ஏற்றாற்போல் பதில் கூறுவான். ராஜாவின் குணம் அறிந்து சரியான தாளம் போட்டுப் பேசுவான்.

ஒரு நாள் காலையில் அரசனும் மந்திரியும் அரண்மனை உப்பரி கையில் நின்றுகொண் டிருந்தார்கள். அப்போது அந்தப் பக்கமாகக் காய்கறி விற்பவர்கள் தங்கள் தலையில் கூடை கூடையாகக் கத்திரிக் காயை எடுத்துச் சென்றார்கள். அவைகள் பார்வைக்கு மிக அழகா யிருந்தன. அதன் பசிய நிறம் கண்ணைப் பறித்தது. இந்தக் காய்களைப் பார்த்ததும் அரசன் மந்திரியைப் பார்த்து, "மந்திரி, பார்த்தாயா கத்திரிக்காய்களை! அடடா என்ன அழகு, என்ன அழகு! அவைகளைத் தினந்தோறும் சாப்பிட்டுக்கொண்டே வந்தால் கூட என் ஆசை தீராது போலிருக்கிறதே!" என்றான்.

இதைக் கேட்ட மந்திரி, "ஆமாம் மகாராஜா! அந்தக் காய்களின் அழகுக்காகவே, கடவுள் அவைகளுக்கு இயற்கையாகவே, ஒரு குல்லாய் போட்டிருக்கிறார், பார்த்தீர்களா" என்று கூறிவிட்டு, மன்னனுக்குத் தினந்தோறும் கத்திரிக்காயைக் கொண்டுவரும்படி ஏற்பாடு செய்தான்.

அன்று முதற்கொண்டு மன்னன் கத்திரிக்காயை விடாமல் சுமார் பத்து நாட்களுக்குமேல் சாப்பிட்டுக்கொண்டு வந்தான். கத்திரிக்காயை விடாமல் சாப்பிட்டு வந்ததனால் உடம்பில் அதிக உஷ்ணம் ஏற்பட்டு வயிற்று வலியை உண்டாக்கி விட்டது. மன்னன் துடியாய்த் துடித்தான். வயிற்றைப் பிடித்துக்கொண்டு கதறினான். மன்னன் மந்திரியைப் பார்த்து, "மந்திரி! அந்தக் கத்திரிக்காயை விடாமல் சாப்பிட்டதனல்தான் இந்த வயிற்றுவலி வந்தது என்று வைத்தியர்கள் சொல்கிறார்கள். பாழாய்ப்போன கத்திரிக்காய் நாளை முதல் எனக்கு வேண்டாம்" என்றான். மன்னன் கூறியதைக் கேட்ட மந்திரி, "ஆமாம், மகாராஜா! கத்திரிக்காய் லேசுப்பட்டதா? மகா உஷ்ணமாச்சே! அது மகா கொடியதைச் செய்யுமே! இதன் குணத்தை அறியாமலா, கடவுள் இதன் குல்லாய்க்குமேல் நீண்ட பெரிய ஆணியை அடித்திருக்கிறார்!" என்றான்.

இதைக் கேட்ட மன்னன் நோவதா சிரிப்பதா என்று தெரியாமல் விழித்தான்.

—டி. வி. ரங்கசாமி.

பச்சைக்கல் சங்கிலி

எஸ். டி. ஸ்ரீநிவாசன்

"ராஜி! அழாதேம்மா! நீசமத்தோல்லியோ?... நாளைக்கே உனக்கு அதுமாதிரி ஒரு சங்கிலி வாங்கிண்டு வந்து தரேன்.."—தரையில் புரண்டு அழுதுகொண்டிருந்த தன் தங்கையைச் சமாதானப்படுத்த முயன்றான் ராமமூர்த்தி.

"டேய் ராமு!....ராமு!..." கூடத்திலிருந்து வீடே அதிர்ந்து போகும்படி குரல் கேட்டது.

"ராஜி! அப்பா கூப்பிடரு. நான் என்னன்னு கேட்டுட்டு வரேன். நீ அழாதே இரு.." என்று சொல்லிவிட்டுக் கூடத்திற்கு வந்தான் ராமு.

அவன் தகப்பனார் சட்டை போட்டுக்கொண்டு கையில் பையுடன் எங்கோ கிளம்பத் தயாராய் இருந்தார்.

"டேய்! சொக்காய் போட்டுண்டு என்னோடு வா! சில சாமான் வாங்கிக் கொடுக்கிறேன். எடுத்துண்டு வந்து அம்மாகிட்டே கொடு.."

ராமமூர்த்தி சட்டையை மாட்டிக்கொண்டு தகப்பனாருடன் கிளம்பினான்.

அவன் கால்கள் நடந்து கொண்டே இருந்தன. ஆனால் மனம் அன்று வீட்டில் நடந்த சம்பவத்தை நினைத்துத் தவித்துக் கொண்டிருந்தது.

* * *

ராமமூர்த்தியின் தகப்பனார்—விசுவநாதன்—ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயர். லக்ஷ்மி பெருத்த சீதனங்களுடன்தான் அவருக்கு மனைவியாக வந்தாள். ஆனால் உபாத்தியாயர் வேலையில் கிடைத்த குறைந்த சம்பளமும் ஊதாரித்தனமும் சேர்ந்து அவளை என்றைக்கும் கஷ்டப்படும் நிலையில் வைத்தன. ராமமூர்த்தி பிறந்து எட்டு வருடங்கள் கழித்து ராஜி பிறந்தாள். ராமமூர்த்திக்குத் தன் தங்கையின்மேல் அபார வாஞ்சை.

வீட்டின் நிலைமை தெரிந்து ராமமூர்த்தியும் புத்திசாலித்தனமாக நடந்து வந்தான்.

இப்போது ராமமூர்த்திக்குப் பதின்மூன்று வயது. நான்காம் பாரத்தில் படித்து வந்தான். ராஜிக்கு ஐந்து வயது.

ராஜியின் முதல் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம், நான்கு வருஷங்களுக்கு முன் தீபாவளியன்று நடந்தது. ராஜியின் மாமா அந்தச் சமயத்தில் குழந்தைக்குப் பச்சைக்கல் டாலர் வைத்த ஒரு மெல்லிய தங்கச் சங்கிலி, மூன்று சவரனில் செய்துபோட்டார். தன் நகைகளெல்லாம் போய்விட்ட போதிலும் தம்பி தன் பெண்ணுக்குச் செய்துபோட்ட அந்தச் சங்கிலியை மாத்திரம் ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வந்தாள் லக்ஷ்மி. ஆனால் அதற்கும் இன்று 'தலைவலி' வந்துவிட்டது.

தீபாவளிக்கு இன்னும் மூன்றே நாட்கள்தான் இருந்தன. பள்ளிக் கூடத்திலிருந்து வந்த விசுவநாதன் மனைவியிடம், "லக்ஷ்மி! நம்ப ராஜியின் சங்கிலி இருக்கே, அதை இப்படிக் கொண்டு வா. ரொம்ப அவசரமாக எழுபத்தஞ்சு ரூபாய் வேணும். அதை நகைக் கடையில் அடகு வைத்து இப்போதைக்கு ரூபாய் வாங்கிக்கிறேன். அடுத்த மாதம் மீட்டுக் கொடுத்துடறேன்" என்ருர்.

லக்ஷ்மிக்குத் 'திக்'கென்றது. ஒரு தரம் அது நகைக் கடைக்குச் சென்ருல் அது மீண்டும் திரும்பாது என்று அவளுக்கு நன்ருகத் தெரியும்.

அவள் மெதுவாக, "என் நகைகளை நீங்க கேட்டபோது நான் ஒண்ணும் சொல்லாமல் எடுத்துக் கொடுத்துட்டேன். ஆனல் இது என் தம்பி ராஜிக்காகப் பண்ணிப் போட்டது.."—அவள் முடிக்கவில்லை. அதற்குள் விசுவநாதனுக்குப் பிரமாத கோபம் வந்து விட்டது.

"அடுத்த மாசம் அதை நான் மீட்டுக் கொடுத்து விடுகிறேன் என்கிறேன், நீ என் தடங்கல் சொல்றே? கொண்டா அதை.."

"இன்னும் மூணு நாளிலே தீபாவளி வேறு வறது.."

"நீ இப்போ கொடுக்கப் போறியா அல்லது நானே பெட்டியைத் திறந்து எடுத்துக் கொள்ளட்டுமா?.."

தன் கணவன் நகையை எடுத்துக் கொண்டு போகாமல் இருக்கப் போவதில்லை என்று நன்ருகப் புரிந்துவிட்டது லக்ஷ்மிக்கு. மெதுவாக உள்ளே போய்ப் பெட்டியைத் திறந்தாள். அந்தச் சமயத்தில் தெருவில் விளையாடிக்கொண்டிருந்த ராஜி எனே உள்ளே ஓடி வந்தாள். அம்மா பெட்டியிலிருந்து • தன் சங்கிலியை எடுக்கவே அதை அவள் தாயின் கையிலிருந்து பிடுங்கித் தன் கழுத்தில் போட்டுக்கொண்டாள்.

இதைப் பார்த்த விசுவநாதன் ராஜி அருகில் வந்து, "ராஜி! அதைக் கழட்டிக் கொடு. மெருகு போட்டுண்டு வந்து தறேன். நாளைக்குப் போட்டுக்கலாம்" என்ருர்.

ஆனல் ராஜி பிடிவாதம் பிடிக்கவே, விசுவநாதன் அவளைப் பளாரென்று ஓர் அறை வைத்துவிட்டுப் பலவந்தமாக அவள் கழுத்தில் இருந்த அந்தச் சங்கிலியைக் கழற்றிக்கொண்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் ராமமூர்த்தி விளையாடிவிட்டு வீட்டிற்கு வந்தான். ராஜி கதறிக் கதறி அழுவதையும் தன் அம்மா வாசற்படியண்டை கண்களில் நீர் தளும்ப நின்றுகொண்டு ராஜியைச் சமாதானப் படுத்துவதையும் கண்ட அவன் மனம் பெரிதும் கலங்கியது. அவனும் ராஜியை எவ்வளவோ தூரம் சமாதானப் படுத்த முயன்ருன்.

* * *

விசுவநாதன் ஒரு நகைக் கடைக்குள் நுழைந்து அந்தச் சங்கிலியை அடகுவைத்து எழுபத்தைந்து ரூபாய் வாங்கினர். ராமமூர்த்தியை அழைத்துக்கொண்டு பக்கத்திலிருந்த மளிகைக் கடைக்குச் சென்று அவனிடம் சில சாமான்களை வாங்கிக் கொடுத்தார். கால் பவுண்ட் பப்பர்மிட் வாங்கி அதையும் பைக்குள் போட்டார்.

“நீ இந்தப் பையை எடுத்துண்டு வீட்டுக்குப் போ. ராஜி கிட்டே பப்பர்மிட்டைக் கொடு. அழாமல் பார்த்துக்கோ” என்று சொல்லி ராமமூர்த்தியை வீட்டுக்கு அனுப்பினார் விசுவநாதன்.

பையைத் தூக்கிக்கொண்டு ராமமூர்த்தி நடந்து வந்துகொண்டிருந்தான்.

அவன் ‘லஸ்’ முனையில் ஒரு ரோல்ட் கோல்ட் நகைக்கடை முன் வரும்போது சட்டென்று நின்றான். அந்தக் கடையில் கண்ணாடி ‘கேஸி’ல் வைத்திருந்த ஒரு சங்கிலி அவன் கண்களில் பட்டது. அந்தச் சங்கிலி சற்றுமுன் தன் தகப்பனார் அடகு வைத்த ராஜியின் சங்கிலி மாதிரியே இருந்தது.

சட்டென்று அவன் மனத்தில் ஒரு யோசனை உதித்தது. அதை ராஜிக்கு வாங்கிக் கொடுத்து விட்டால் அவள் சமாதானம் அடைந்து விடுவாள். அதன் விலை என்ன இருக்கும் என்று அறியத் துடித்தது அவன் உள்ளம். அடுத்த கணம் கடைக்குள் நுழைந்தான் அவன். அதன் விலை நான்கு ரூபாய் என்று தெரிந்துகொண்டதும் அவன் மனத்தில் ஏதோ ஒரு புது நம்பிக்கை பிறந்தது.

மெதுவாகக் கடையை விட்டுக் கீழிறங்கி நடந்தான். மறுபடியும் யோசனையில் ஆழ்ந்தது அவன் மனம். 'தன் அப்பாவிடம் இதைச் சொன்னால் அவர் காதில் வாங்கிக் கொள்ள மாட்டார். அம்மா?.. அம்மாவிடம் அப்பாவுக்குத் தெரியாமல் காசு ஏது? பின் எப்படி ராஜியைச் சமாதானப் படுத்துவது?'

ஒரு விஷயம் அவன் மனத்தில் பளிச்சிட்டது. அவன் வகுப்பில் உபாத்தியாயர் வகுப்புப் பிள்ளைகளைக் கொண்டே ஒரு சிறு 'கிளாஸ் ஸேவிங்ஸ் பாங்கு' நடத்தி வந்தார். அதில் கடந்த மூன்று வருஷங்களாக—அரையணுவும் ஓரணுவுமாக ராமமூர்த்தி சேர்த்து வைத்த பணம் ஐந்து ரூபாய் இருந்தது. மறுநாள் பள்ளிக்கூடம் சென்றதும் அதிலிருந்து நான்கு ரூபாய் வாங்கி, அந்த 'ரோல்ட் கோல்ட்' சங்கிலியை வாங்கிவிடுவது என்று அவன் தீர்மானித்தான். ராஜி திருப்தி அடைந்தால்தான் அவன் மனம் நிம்மதி காணும். பிறகு வேகமாக வீடு நோக்கி நடந்தான்.

ஒரு பெரிய ஓட்டல்; உள்ளே ரேடியோ பாடிக்கொண்டிருந்தது. அதைத் தாண்டிப் பக்கத்தில் இருந்த ஒரு சிறு சந்தில் நுழைந்தான் அவன். ஒரே இருட்டு. காலில் ஏதோ தட்டுப்பட்டது. குனிந்து கையில் எடுத்தான். ஒரு மணிபர்ஸ்! ஒரு கணம் சுற்று முற்றும் பார்த்தான். ஒருவரையும் காணோம். சட்டென்று அதை நிஜார்ப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு வேகமாக நடந்தான். மனம் மாத்திரம் 'திக் திக்' என்று அடித்துக்கொண்டிருந்தது. வீட்டை அடைந்ததும் அவன் சாப்பிட்டுவிட்டு மாடி அறைக்குச் சென்றான்.

மாடிக்குச் சென்ற அவன் நிஜார் ஜேபியிலிருந்து அந்தப் பர்ஸை எடுத்துத் திறந்தான். அதில் நூறு ரூபாய் நோட்டுக்களும், பத்து ரூபாய் நோட்டுக்களுமாக ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் இருந்தது. பர்ஸை மூடிப் பாக்கெட்டில் வைத்துக்கொண்டான்.

படிப்பின் மேல் புத்தி செல்லவில்லை. 'அப்பா! எவ்வளவு பணம். இதைக் கொண்டு என்ன என்ன வாங்கலாம்! தீபாவளிக்கு அம்மாவுக்குப் பட்டுப் புடவை, தனக்கும் ராஜிக்கும் புதுத் துணிகள்; எல்லாவற்றிற்கும் மேலாக ராஜியின் சங்கிலியை மீட்டுவிடலாமே!' என்று யோசித்தது அவன் மனம்.

படுத்துக்கொண்டான். வெகு நேரம்வரை அவனுக்குத் தூக்கமே வரவில்லை. பெருத்த யோசனை!

திடுமென அவன் இன்பக் கனவுகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி விழுந்தது.

'ஆமாம், நாம் இவ்வளவு யோசிக்கிறோம். பணத்தை இழந்தவன் எவ்வளவு கஷ்டப்படுவான்! நாம் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த நம் பணமல்ல இது. இதை நாம் உபயோகப்படுத்துவது பாவம். நியாயமாக இதன் சொந்தக்காரரிடம்தான் இதைச் சேர்த்துவிட வேண்டும். ஆமாம். யாருடைய பர்ஸ் என்று இதை நாம் கண்டு பிடிப்பது?'

சட்டென்று அவனுக்கு ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வந்தது. நோட்டுக்களோடு பர்ஸில் வேறு சில காகிதங்களும் இருந்ததாக அவன் நினைவு. அவைகளிலிருந்து சொந்தக்காரரைக் கண்டு பிடிக்க முடியுமா என்று பார்க்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான் அவன்.

மறுநாள் காலையில் எழுந்ததும் அவன் பர்ஸைப் பார்த்தான். அதில் ஒரு 'விஸிட்டிங் கார்டு' இருந்தது. 'ரங்கா நாயுடு, 53, புதுத் தெரு' என்று அச்சடித்து இருந்தது அதில்.

காபி குடித்ததும், அவன் அந்தப் பர்ஸை எடுத்து நிஜார்ப் பைக்குள் போட்டுக்கொண்டு அந்த வீட்டிற்குச் சென்றான்.

அது ஒரு பெரிய பங்களா. அதனுள் நுழைந்த அவன், முன் பக்கம் இருந்த ஹாலின் வாசற்படியண்டை நின்று, "ஸார்" என்றான்.

ஆனால் உள்ளே இருவர் உரக்கப் பேசிக்கொண்டிருக்கவே இவன் கூப்பிட்டது ஒருவர் காதிலும் விழவில்லை.

அவர்கள் பேச்சை உற்றுக் கவனித்தான்.

'போலீஸிலே கம்பிளெயிண்ட் கொடுங்கோ! பேப்பரிலே போடுங்கோ..."—ஒரு பெண்ணின் குரல்.

"எல்லாம் செய்யலாம். ஆனால் அதை எடுத்தவாள் மனசு வந்து கொடுக்கணுமே!"—ஆண் குரலில் ஏமாற்றம் தொனித்தது.

ராமமூர்த்திக்கு விஷயம் விளங்கிவிட்டது. "ஸார்!" என்று மறுபடியும் கூப்பிட்டான்.

"யாரது?" என்று கேட்டுக் கொண்டே வெளியே வந்தார் ஒரு பெரியவர்.

"ஸார், நான் ரங்கா நாயுடுவைப் பார்க்கவேண்டும்.." என்றான் ராமமூர்த்தி.

"நான்தான் அது. நீ யார்?"

நிஜார் பாக்கெட்டில் இருந்து அவன் அந்தப் பர்ஸை எடுத்துக் கொடுத்தான்.

அந்தப் பெரியவருக்குத் தாம் காண்பது நனவுதானு என்றே புரியவில்லை. மகிழ்ச்சி அவருக்குத் தாங்க முடியவில்லை. அவர் ராமமூர்த்தியை அப்படியே கட்டிக் கொண்டு, "பையா! உலகத்தில் உன்னைப்போல் வேறு ஒருத்தரையும் பார்க்க முடியாது. சுசீலா! இதோ பார். பர்ஸ் கிடைச்சுப் போச்சு!" என்று குதித்தார் அவர். உள்ளே இருந்து வந்த அவர் பெண் சுசீலாவும் ராமமூர்த்தியையே வைத்த விழி வாங்காமல் பார்த்துக்கொண்டு நின்ருள். சட்டென்று பெரியவர் அந்த மணி பர்ஸைத் திறந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து, "பையா! இதை வச்சுக்கோ" என்ருர்.

ராமமூர்த்திக்கு அதை வாங்கக் கை வரவில்லை.

அந்தச் சமயத்தில் பங்களாவுக்குள் ஒரு மோட்டார் வந்துநின்றது. ஒரு வாலிபன் அதிலிருந்து இறங்கினுன். அவனைக் கண்ட பெரியவர், "ராஜமன்னுரு! நேத்துத் தொலைஞ்சுபோன என் பர்ஸ், மொத்தப் பணத்தோடேயும் கிடைச்சுப்போச்சு. இந்தப் பையன் தான் கொண்டு வந்து கொடுத்தான்" என்ருர்.

ராமமூர்த்தி காரிலிருந்து இறங்கி வந்த வாலிபனைப் பார்த்தான். முதல் நாள் விசுவநாதன் ராஜியின் சங்கிலியை அடகு வைத்த அந்த நகைக் கடைக்குச் சொந்தக்காரன்தான் அவன். முதல் நாள் அவனை ராமமூர்த்தி அங்கே பார்த்தது நன்ருக ஞாபகத்திற்கு வந்தது. அவன் அப் பெரியவரின் பிள்ளை. அந்த நகைக் கடை அந்தப் பெரியவருக்குச் சொந்தம் என்று அறிந்த ராமமூர்த்திக்குச் சட்டென்று ஒரு யோசனை உதித்தது.

உடனே ராமமூர்த்தி பெரியவரிடம், "எனக்கு இந்தப் பணம் வேண்டாம், ஸார். நேத்து உங்க கடையிலே எங்க அப்பா என் தங்கையின் பச்சைக்கல் டாலர் பதிச்ச சங்கிலியை எழுபத்தஞ்சு ரூபாய்க்கு அடகு வச்சார். உங்க பிள்ளையிடம் சொல்லி அதை என்னிடம் கொடுத்துவிடச் சொல்லுங்கோ. என் தங்கை ரொம்ப அழரு. அதுவே நீங்க இப்போ எனக்குச் செய்யக்கூடிய பெரிய உபகாரம்" என்று கெஞ்சும் பாவனையில் சொன்னுன்.

"இதையும் வைத்துக்கொள், அதையும் கொடுக்கிறேன்" என்ருர் அவர்.

* * *

நிஜார், சட்டை, தனக்குப் பாவாடை, ஜாக்கெட் துணி, பட்டாசுப் பொட்டலங்கள், தன்னுடைய பச்சைக்கல் டாலர் பதித்த சங்கிலி இத்துடன் தன் அண்ணு ஒரு மோட்டாரில் வந்து இறங்குவதைக் கண்ட ராஜிக்கு ஒரே ஆச்சரியமாய் இருந்தது.

முழு விவரத்தையும் அறிந்த லக்ஷ்மி ராமமூர்த்தியின் அபார புத்தியைக் கண்டு பெருமிதம் அடைந்தாள்.

* * *

அன்று தீபாவளி. ராமமூர்த்தி கொளுத்திப் போட்ட எலக்டிரிக் பட்டாஸ் வெடித்தபோது உண்டான வெளிச்சத்தில், ராஜி கழுத்தில் போட்டுக்கொண்டிருந்த சங்கிலியின் டாலர் மின்னியது. ராமமூர்த்தியின் மனமும் நிம்மதி கண்டது.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(K) 258. கிட்டப்பா, K., ஸ்ரீரங்கம். 259. குதூஸ்கன், V. S., உடுமலைப்பேட்டை. 260. கிருஷ்ணன், V., விஜயவாடா. 261. கோமதி, V. S., புதுடில்லி. 262. குப்புசாமி, S., உருளையன் பேட்டை. 263. குமாரசாமி, T., ராஜபாளையம். 264. கல்யாணி, அம்புஜம், R., பட்டி. 265. கோமதி, V. S., ஆலப்புழை. 266. கிருஷ்ணன், திருவனந்த புரம். 267. கோதண்டராமானு ஜம், M., திருவாரூர். 268. கந்த சாமி, N., கொழும்பு. 269. கிருஷ்ணன், K., திருநெல்வேலி, 270. கோதண்டன். G., சென்னை-1. 271. கிருஷ்ண வேணி, G., ராசிங்கபுரம். 272. கமலா, S., அம்பாசமுத்திரம். 273. கிருஷ்ணராஜ், புதுச்சேரி. 274. குமாரசாமி, S., சுளிபுரம், இலங்கை. 275. கதிர்வேலு, வர கூர்-புதூர். 276. கௌசல்யா, N., வரதராஜபுரம். 277. கோதண்டகவுண்டன், R., தார மங்கலம். 278. கலாவதி, R., சென்னை-4. 279. கல்யாண சுப்பிரமணியன், R., திண்டுக்கல். 280. கிருஷ்ணமூர்த்தி, N., சேலம். 281. கிருஷ்ணசாமி, N. S., சென்னை-1. 282. கிருஷ்ண சாமி, K. T., கணியனூர். 283. கிருஷ்ணமூர்த்தி, S., கோயம்புத் தூர். 284. கேசவன், P., பெங்க ளூர். 285. கிருஷ்ணமூர்த்தி, B., திருமண்ணாமலை. 286. கிருஷ் ணன், K. V., கோபாலசமுத்தி ரம். 287. கிருஷ்ணையன், ருக் மிணி, E. K., ஐயம்பேட்டை. 288. கந்தசாமி, A., கோயம்புத் தூர். 289. கிருஷ்ணன், லவ் டேல், நீலகிரி. 290. கிருஷ்ண மூர்த்தி, P., பெண்ணாகரம். 291. சாமிநாதன், E., சென்னை-4. 292. கமலாதேவி, S., தாரா புரம். 293. கந்தசாமி, P., ஆர். எஸ். புரம். 294. கிருஷ்ணன், ஜோதியம்மாள், C., காட்டுச்சேரி. 295. கந்தசாமி, வள்ளியம்மாள், P., சிங்காரநல்லூர். 296. கண் ணன், G., பீளமேடு. 297. காஜா நவீம், A. K., ஏர்வாடி. 298. குப்புசாமி, சண்முகம், வள்ளி, சரோஜா, R., சென்னை-1. 299.

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி ....

(தேதி, மாதம், வருஷம்)

நவ '52 கூபன் நெ:

கண்ணன், S., ஜம்பலப்புத்தூர். 301. கண்ணன், A. R., கோயம்புத்தூர். 302. கிருஷ்ணசாமி, M., திண்டிவனம். 303. கந்தசாமி, R., வளவனூர். 304. கண்ணன், K., சிதம்பரம். 305. கண்ணன், S., நெல்லிக்குப்பம். 306. கலீல் ரஹ்மான், (விலாசம் எழுதவில்லை). 307. கண்ணன், K. P., காட்டுமன்னார்கோயில். 308. கார்த்திகை வேலநாதன், D., ராமநாதபுரம். 309. கல்யாணசுந்தரம், S., கொழும்பு. 310. கற்பகவல்லி, புவனேஸ்வரி, R., கொடுமுடி. 311. கண்ணன், P. S., கும்பகோணம். 312. கந்தசாமி, T. S., தாரமங்கலம். 313. கருப்பையா, N., ஜம்பலப்புத்தூர். 314. கண்ணன், V., திருக்கண்ணமங்கை. 315. கிருஷ்ணன், C.

★★★★★★★★★★★★★★★★

கண்ணன்

கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் அந்த மாதத்துக் கூபனும் அதற்கு முந்திய இரண்டு மாதக் கூபன்களும் தான் அனுப்ப வேண்டும். பழைய கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★★

V., திருப்பாதிரிப்புலியூர். 316. குப்புசாமி, P. K., புதூர். 317. கிருஷ்ணசாமி, T., தேவாரப்பட்டி. 319. கர்ஸான், அரவங்காடு. 319. கிருஷ்ணன், V. G., பம்பாய். 320. கமலா, C., கல்கத்தா-29. 321. கருப்பையா, M., கண்டி, சிலோன். 322. கிருஷ்ணன், S. N., பெங்களூர். 323. கிருஷ்ணன், P., வெள்ளக்கோயில். 324. கிருஷ்ணசாமி, S., திருவனந்தபுரம். 325. கிருஷ்ணமூர்த்தி K.R., புனா-2. 326. கண்ணன், R., நாகல்-ஆலத்தூர். 327. கண்ணன், கமலா, ராஜகோபாலன், போடிநாயக்கனூர். 328. கிருஷ்ணசாமி, S.P., புதுச்சேரி. 329. கிருஷ்ணராவ், T.V., சத்தியமங்கலம். 330. கல்யாணசுந்தரம், T.S., திருப்பத்தூர். 331. கிருஷ்ணன், S. G., குகளூர். 333. கிருஷ்ணமூர்த்தி, K. S., சென்னை-4. 334. கந்தசாமி, S., கோவிந்தனூர். 335. கல்யாணி, K. V., கடயம். 336. காளியப்பன், N., சின்னமனூர். 337. குலசேகரன், D., (விலாசம் எழுதவில்லை). 338. கிருஷ்ணன், லலிதா, S. S., கோயம்புத்தூர் 339. கருப்பையா, A., சோழவந்தான். 340. கிருஷ்ணவேணி, M., வளவனூர். 341. கலைத் தமிழன், மேட்டூர் அணை. 342. கிருஷ்ணசாமி, R., ராஜபாளையம். 343. கோகிலா, R., குடியாத்தம், 344. கண்ணன், R., பெரம்பலூர். 345. கிருஷ்ணமூர்த்தி, S., (விலாசம் எழுதவில்லை). 346. கல்யாணராமன், S., சென்னை-4. 347. கருணாகரன், U., விருதுநகர்.

(மீதி அடுத்த இதழில்)

கிராமபோன் ☆ புரொபஸர் விஞ்ஞானம்



ஒருவர் பாடும்போது ஒலி உண்டாகிறது ஒலியினுல் அசைவு உண்டாகிறது. இந்த அசைவை ஊசி முனையால் மெழுகு தடவிய ஒருவகைப் பொருளில் பதிவு செய்கிருர்கள். அந்தப் பொருள் ஒரு தட்டுப்போல் அமைந்தது. அது சுழலும் போதுதான் ஊசி பதிவு செய்கிறது. பாட்டின் ஒலிக்குத் தக்கபடி ஊசி ஆழமாயும் லேசாயும் கோடு வரைகிறது. இந்த மெழுகுத் தட்டிலிருந்து ஸெலுலாயிடு தட்டுகளில் பிரதிகள் எடுக்கிருர்கள். அவைதாம் நாம் காணும் இசைத்தட்டுகள்.

இதோ இந்த இசைத்தட்டை பூதக் கண்ணாடியால் பார்த்தால் கோடுகள் நெளிவாகவும் மேடு பள்ளமாகவும் இருப்பது தெரியும். இந்தக் கோடுகளில் ஒலிப்பெட்டியின் ஊசி படும்போது அந்த அந்த இடத்துக்கேற்ப அசைகிறது. அந்த அசைவு ஒலிப்பெட்டியிலுள்ள மெல்லிய தகட்டை அதிரச் செய்கிறது. அப்போது ஒலி அலைகள் உண்டாகின்றன. அந்த ஒலி அலைகளின் அதிர்ச்சியிலிருந்து உண்டாகும் மெல்லிய ஓசையானது வர வர விரியும் குழலின் மூலமாகப் பெரிதாகி நமக்கு அந்தப் பாடகர் பாடியது போலவே கேட்கிறது. ஆனால் ரேடியோ நிலையத்தில் உள்ள கருவியில் தகட்டின் அதிர்ச்சியால் ஒலி அலைகள் உண்டாவதில்லை. மின்சார சக்தி, டெலிபோனில் போல உண்டாக்கப்படுகிறது. ரேடியோவில் கேட்கும் இசைத்தட்டு ஸங்கீதம் இவ்விதமே நமக்குக் கேட்கிறது.

கிராமபோன்



நெளிவாக உள்ள கோடுகள்

இதை முதலில் கண்டுபிடித்தவர் யார்?

பலவற்றைக் கண்டு பிடித்த தாமஸ் ஆல்வா எடிஸன் தான் இதையும் 1877-ஆம் வருஷத்தில் கண்டுபிடித்தார். அதை வர வர. திருத்தி அமைத்தார். முதலில் அமைத்த பதிவுத் தட்டு, குழாய் வடிவானது. அதற்குப் 'போனோகிராப்' என்று பெயர். அக்காலத்தில் அதிலிருந்து உண்டாகும் ஓசை மிக மிக மெல்லியதாக இருந்ததால் நன்றாக வெளியே கேட்காது. டாக்டர்களுடைய ஸ்டெதஸ்கோப்பைப் போன்ற கருவியின் மூலமாகக் காதில் மாட்டிக் கொண்டவர்கள் மட்டும்தான் கேட்கமுடியும். பின்னால் பலவகையிலும் சீர்திருத்தம் அடைந்து, ஒலி எதிரிலிருந்து கேட்பதுபோல ஆகிவிட்டது.

1 'போனோகிராப்'



3 'போனோகிராப்'



2 'போனோகிராப்'



4 கிராமபோன்



தாமஸ் ஆல்வா எடிஸன்

5 கிராமபோன்

எலியின் கல்யாணம்

எஸ். கே. அரவிந்தன்

எலிக்குக் கல்யாணம்
சுண்டெலிக்குக் கல்யாணம்
'இன்விடேஷன்' பெற்ற எலிகள்
ஓடி வந்தன.
உற்ற எலி உறவு எலி
எல்லாம் வந்தன.
ஊரிலுள்ள எலிகளெல்லாம்
ஒன்று சேர்ந்தன.
காகிதமும் புஸ்தகமும் கொஞ்சமல்லவே
காரவடைக்கும், மசால்வடைக்கும் பஞ்சமல்லவே.
குண்டு வண்டு நாகஸ்வரம்
நன்கு வாசிக்க,
காதருகே கொசுவும் வந்து பாடித் தீர்த்தது.
ஊரில் பெரிய பெருச்சாளியார் சடங்கு
நடத்தவே
ஊக்கத்துடன் மாப்பிள்ளையும் தாலிகட்டவே
நெருங்கி வந்து, பெண்ணெலியிடம்
குனிந்து கொண்டதே.
நாணிக்கோணிப் பெண்ணெலியும்
தலையை நீட்டவே,
'கரெக்டான டய'த்தினிலே
கதவு திறந்ததே.
கடுவன் பூனை ஒன்று வந்து
அங்கு நின்றதே.
கண்டதனை எலிகளெல்லாம்
கதறி ஓடின.
கலக்கத்துடன் வேகமாக
வளைக்குள் ஓடின!

மன்னிப்பு

எஸ். கே. ராவ்

இடம்: தண்டகாரண்ய வனம்

நேரம்: காலை நேரம்.

(ராமரும் லக்ஷ்மணனும்)

ராமன்: வால்மீகி முனிவர் எங்கே?

லக்ஷ்மணன்: அவர் தேவிக்குத் தங்கள் வருகையைத் தெரிவிக்கச் சென்றிருக்கிருர்.

ராம: (இங்கும் அங்கும் உலவிக்கொண்டே) ஏன் இன்னும் திரும்பிவரவில்லை? நான் போய் நேரில் பார்க்கிறேன்.

லக்ஷ்ம: அண்ணு, நில்லுங்கள். அதோ மகரிஷியே வருகிருர்.

ராம: (முன் சென்று) மகரிஷே! சீதை எங்கே?

"ராமசந்திரா, இது சமயம் அல்ல; தேவி நித்திரை செய்கிருள்."

வால்மீகி: ராமசந்திரா, இது சமயமல்ல. சீதை இப்பொழுது தான் தூங்குகிறுள். நான் இது போன்ற ஓர் அற்புத மாறுதலை ஒருபொழுதும் பார்த்த தில்லை. என் வார்த்தையைக் கேட்டதும் அவள் சரீரத்தில் ஒரு புது வேகம் வந்துவிட்டது. வெளுத்துப்போயிருந்த சன்னங் களில் ரத்த ஓட்டத்தின் செம்மை காணப்படுகிறது. பனித்திவலை மேல் சூரிய கிரணங்கள் பட்டதும் சோபிப்பது போல் புன்சிரிப்பினுல் கண்ணீர் பிரகாசிக்க, மெல்லிய குரலில், 'அவர் எங்கே?' என்று குரல் தழுதழுக்கக் கேட்டாள். வேரின் ஆதரவு இல்லாத கொடி போன்று மூர்ச்சித்துத் தரையில் விழுந்து விட்டாள். லவன் அதே சமயம் பானை நிறைய ஜலம் கொண்டு வந்து ஜானகியின் முகத் தில் தெளித்தான். கொஞ்சநேரத் தில் மூர்ச்சை தெளிந்து எழுந்தாள். களைப்படைந்திருந்த சீதை இப் போது சிரம பரிகாரம் செய்து கொண்டாள். வாஸந்தியின் ஸ்நேக பூர்வமான அரவணைப்பில், அவளது கழுத்தை இரண்டு கைகளாலும் கட்டிக்கொண்டு மெதுவாகத் தூங்கிவிட்டாள். தூங்கட்டும், இரவு முழுவதும் தூங்கவில்லை. மிகவும் களைத்துப் போயிருக் கிறுள்.

ராம: குழந்தைகள் எங்கே?

வால்மீகி: அவர்களும் சீதை யோடுதான் இருக்கிருர்கள். போய் அவர்களை அழைத்து வரு கிறேன். அதோ, குசனே வந்து கொண்டிருக்கிருன். குசா! லவன் எங்கே?

(குசன் வருகிருன்)

குசன்: லவன் அன்னையின் அருகே இருந்து சுச்ருஷை செய்துகொண் டிருக்கிருன்.

வால்மீகி: குசா! இவர் உன் பிதா ராமசந்திரர். அவர் உன் சிற் றப்பா, லக்ஷ்மணர். இவர்களுக்கு நமஸ்காரம் செய், குழந்தாய்!

குச: (ராமருக்கு நமஸ்காரம் செய்து அவரைப் பார்த்த வண் ணம் தனக்குள்) இவரா ராமர்! அயோத்தியின் அரசர்! கோடிக் கணக்கானவர்களால் புகழப்படும் ராமசந்திரரே தானு? இவருடைய புதல்வனு நான்? ஆகா, நான் எத் தனை பாக்கியசாலி!

(லவன் வருகிருன்)

வால்மீகி: லவா! இவர் உன் பிதா ராமசந்திரர். அவர் உன் சிற்றப்பா லக்ஷ்மணர். இவர்களுக்கு நமஸ்காரம் செய்.

லவன்: (லக்ஷ்மணரின் பாதங் களில் நமஸ்கரித்து) இப்படிப் பட்ட ஒரு சிற்றப்பா இருப்பதற்கு நான் என்ன பாக்கியம் செய் தேன்! சிற்றப்பா! தங்கள் பாதங் களில் நமஸ்கரிக்கிறேன்.

வால்மீகி: லவா! பிதாவுக்கும் நமஸ்காரம் செய், அப்பா.

லவன்: (கர்வத்துடன் திரும்பி) மகரிஷே! இவருக்கா? ஹூம்! என் தாய் இளம் வயதில் இவருடைய நிழலைப் போன்று இருந்தாள். ராஜ போகங்களை விட்டு வனவாசத் தின் கஷ்டங்களைக் கூட இருந்து அநுபவித்தாள். லங்கா புரியில் ஒவ்வொரு நிமிஷமும் இவரையே சதா நினைந்து கண் ணீர் பெருக்கினுள். அப்படிப் பட்ட பத்தினியை, என் அன்னையை, கர்ப் பிணியாக இருக்கும்போது லோக

அபவாதத்தின் பயத்தால் சற்றும் யோசியாது தண்டகவனத்துக்கு அனுப்பினார். மன்னியுங்கள், மகரிஷே. இந்த லவன் அவரை நமஸ்கரிக்க மாட்டான். கமலத்தை இவர் தம் பாதங்களால் மிதித்துத் துவைத்து விட்டார். மகரிஷே! இவர் அயோத்தியின் அரசராக இருந்தால்தான் என்ன, உலகத்தின் அரசராகவே இருந்தால் என்ன, எனக்கு மிகவும் துச்சம். இவர் லக்ஷக்கணக்கான ராவணர்களை ஜயித்தால்தான் என்ன, ஆனாலும் நான் இவரைப் பயந்தாங்கொள்ளி என்றே கருதுகிறேன். மேலும் (ராமசந்திரரைப் பார்த்து) தயையற்றவர்! அன்பற்றவர்!

ராம: (தீனக் குரலுடன்) லவா! என் இரண்டு குமாரர்களில் நீயே அதிகச் சிரேஷ்டமானவன். இன்று பூமண்டலத்திற்கு அதிபதியாகிய நான் வெஜ்ஜையால் உன் முன் தலைவணங்கி யாசிக்கிறேன். குழந்தாய், வா! என்னைச் சேர்த்து அணைத்துக்கொள்! லவா! என்னை மன்னித்துவிடு! (கையை விரித்து அழைக்கிறார்.)

வால்மீகி: (இரு கண்களிலும் கண்ணீர் பெருக) லவா! என் பேசாதிருக்கிறாய்? புத்திரனிடம் தந்தை மன்னிப்புக் கேட்பதா? இருந்தும் நீ மிகவும் தயையற்றவனாகிவிட்டாய். வால்மீகியினிடம் இவ்வளவு வருஷங்கள் நீ இந்தக் கல்வியைத்தான் கற்றுக்கொண்டாயா?

லவன்: (ராமரிடம் சென்று) அயோத்தியின் அதிபதியே! தங்கள் பத்தினியிடம் மன்னிப்புக் கேளுங்கள். அவள் தயையின் இருப்பிடம்; கருணையின் உருவம். தாங்கள் என் தந்தை. நான் தங்கள் புத்திரன். இப்படி ஒரு கேள்வியை உலகம் உங்களைக் கேட்குமே என்று கோபத்தில் பேசி விட்டேன். அதனால் மன்னியுங்கள்.

ராம: ஆம், குழந்தாய்! அந்தக் கேள்விக்குப் பதிலை உலகம் எதிர்பார்க்கத்தான் பார்க்கும்! (புத்திர வாஞ்சையால் அவர் கண்களில் கண்ணீர் துளிக்கிறது.)

[திரை]

★ 3/1784

"குழந்தைகளே! இந்த அழகான உலகத்தைப் பாருங்கள்! இந்த உலகம் உங்களுடையதுதான். இதன் இயற்கைச் செல்வங்கள் எல்லாம் உங்களுக்காகவேதான் இருக்கின்றன. அழகான நதிகள், மலைகள், வனங்கள் எல்லாம் உங்களை மகிழ்விக்கவே காத்திருக்கின்றன. கவலைப்படாதீர்கள்!"

—நேருஜி.

கேட்டீர்களா!

வேதம் ஓதும் குழந்தை

மைசூரைச் சேர்ந்த குழந்தை ஒன்றுக்கு வயது நாலுதான் ஆகிறது. அந்தக் குழந்தையை அழைத்துக்கொண்டு அதன் தகப்பனுர் யாத்திரை செய்து வருகிறுர். அந்தக் குழந்தை நம்முடைய வேதம்,உபநிஷத் முதலிய நூல்களிலுள்ள சுலோகங்களைக் கரதலைப்பாடமாக ஒப்பிக்கிறது. பெரிய பெரிய பண்டிதர்கள் எல்லாம் இந்த அதிசயத்தைப் பார்த்துப் பிரமிக்கிறுர்கள். குழந்தையின் ஆகாரம் பால்தான். நாலு மணி நேரம்தான் தூங்குகிறது. மற்ற நேரங்களில் பத்மாசனத்தில் அமர்ந்து தியானம் செய்கிறது.

நேருவின் அறிவுரை

"பார்லிமெண்டின் சென்ற கூட்டத்தின்போது நான் வழுக்கி விழுந்துவிட்டேன். உடனே 12 டாக்டர்கள் கூடி, சிகிச்சை செய்யப் போவதாகப் பயமுறுத்தினுர்கள். இறுதியில் ஓர் இன்ஜெக்ஷனும் செய்துவிட்டார்கள். என் வாழ் நாளில் ஒரு போதும் என் உடலுக்குள் ஊசி மூலமாக மருந்தைச் செலுத்தியது இல்லை. அந்த இஞ்ஜெக்ஷனின் பயனுக என் உடம்பு ஒரு பெரிய பலூனைப்போல் ஊதிவிட்டது. அப்படி உடல் பருப்பது வெறுப்பைத் தருகிறது. சொகுசான வாழ்க்கை நடத்தினுல் நீங்களும் அப்படிப் பருத்துத் தான் போவீர்கள். ஆகவே சொகுசான வாழ்க்கையை நீங்கள் அறவே வெறுக்கவேண்டும். மருந்திஞல் மட்டும் எந்த வியாதியும் நீங்கிவிடும் என்று நினைப்பது தவறு. உடலில் நோயை எதிர்க்கும் சக்தி இருக்கவேண்டும். அதற்கு உடலுழைப்பும் தானே தைரியமாக எதையும் செய்ய முற்படும் விடா முயற்சியும் வேண்டும். அப்பொழுதுதான் உங்களுக்குத் தைரியமும் ஏற்படும்; உடல் வலுவும் உண்டாகும்!'' என்று சென்னை வந்திருந்த நேருஜி மாணவர் கூட்டம் ஒன்றில் பேசினுர். "இந்தியாவிலேயே அறிவுக்குப் பேர் போன இடம் சென்னைதான்'' என்றும் அவர் கூறினுர்.

பொருட் காட்சி

மயிலாப்பூர், பி. எஸ். செகண்டரி பாடசாலையில் சென்ற 31-10-52 அன்று ஒரு பொருட் காட்சி நடைபெற்றது. மாணவர்களே செய்த அட்டை ரேடியோ, மோட்டார் கார் முதலிய அழகிய பொருள்கள் இடம் பெற்றிருந்தன. குடிமைப் பயிற்சிப் பகுதி, விளையாட்டுப் பகுதி, சாரண இயக்கப் பகுதி, பத்திரிகைப் பகுதி, நெசவுப் பகுதி ஆகிய எல்லாமே ரொம்ப ஜோராக இருந்தன. அதிலும் நெசவுப் பகுதி அருமையிலும் அருமையாக இருந்தது.

120 வயதுப் பாட்டி

சிப்பாய்க் கலகம் 1857-ஆம் வருஷத்தில் நடந்தது. அப்பொழுதே மிராஜ் நகரத்தில் இருந்த இந்தப் பாட்டிக்கு இருபத்தைந்து வயசாம். இந்தப் பாட்டி இப்பொழுதுதான் போன வாரம் தன் 120-ஆவது வயதில் இறந்து போனுள். சிப்பாய்க் கலகத்தைப்பற்றி இந்தப் பாட்டி தன் கொள்ளு, எள்ளுப் பேரர் பேத்திமார்களுக்குக் கதை கதையாகச் சொல்வாளாம்!

கண்ணன் தபால்

பாராட்டுகிறோம்

அண்ணா!

நமஸ்காரம். குழந்தைகளுக்காக எவ்வளவோ மலர்கள் வந்தன. அவை வருமுன் ஆடம்பரமான பல விளம்பரங்களும் வந்தன. 'அது இது, அப்படி இப்படி' என்று படாடோபமாக மலரைப்பற்றிப் பீற்றிக்கொண்டார்கள். 'அது வராது, இது வராது' என்று பல மாதிரியெல்லாம் ஜம்பம் அடித்துக்கொண்டார்கள். ஆனால் என்ன ஏமாற்றம்! ஆமாம்; ஏமாற்றந்தான். ஒரே சுயவிளம்பர மயம்! 'நானே இந்திரன், சந்திரனும் நானே' என்று ஒரே பேத்தல்!.................ஆனால் கண்ணன் மலர் கண்ணில் ஒற்றிக்கொண்டு, கருத்தை ஊன்றிப் படிக்க வேண்டிய மலர் என்பதில் என்ன சந்தேகம்? கதைகள் எல்லாம் சிறுகதைகளுக்குரிய லக்ஷணங்களுடன் சிறுவர்களுக்கு ஏற்ற விஷயங்களுடன் பிரமாதமாக இருக்கின்றன.............வெறும் கற்றுக்குட்டிகளின் உளறலாக இல்லாமல் கல்வியறிவு பெற்றவர்களின் பொன்மொழிகளாக இருக்கின்றன. படங்கள், பாட்டுக்கள் எல்லாமே உயர்ந்த ரகம். பகட்டுச் செய்யாமல், நிதானம் இழக்காமல், நேர்மையான தொண்டு செய்து வரும் உங்களைப் பாராட்டுகிறோம். கண்ணன் மலருக்கு விலை போட்டு மதிப்பிட முடியாது என்பதே எங்கள் சங்கத்தில் எல்லோருடைய அபிப்பிராயம். வாழ்க கண்ணன்!

ஏ. ஆர். சீனிவாசன், காரியதரிசி, சிறுவர் சங்கம். பம்பாய், 22.

*   *   *

பொன் மலர்

'கண்ணன்' மாத இதழ் ஒவ்வொன்றும் குழந்தைகளின் உற்ற நண்பன் என்றால் ஒவ்வொரு வருஷத் தீபாவளி மலரும் என்றென்றும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய அரிய பொக்கிஷம். மட்ட ரகத்தின் வாசனை கொஞ்சங்கூட இல்லை. தங்கள் பெரு முயற்சியால் தமிழ் நாட்டுக் குழந்தைகளின் அறிவு முதிர்ந்து வாழ்வில் முன்னேற்றமடைவார்கள் என்பது திண்ணம். குழந்தைகளின் மனசை அறிந்து அதற்குத் தகுந்தாற்போல் இனிய கருத்துக்களையும் உண்மைகளையும் கொண்ட கதை, கட்டுரை, கவிதைகளை வெளியிட்டதை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஒரே வார்த்தையில் சொன்னால் 'நறுமணம் வீசும் பொன்மலர்' என்றே சொல்லலாம்,

—ஜி. எஸ். மணி, ஆதிகுடி.

தாத்தாவின் பொருமை

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். எனக்கு வயது எழுபது. என் காலத்தில் சிறுவர்களுக்கென்று பத்திரிகைகளே கிடையாது. என் தாத்தா, பாட்டிகள் தான் ஆசையோடு புராணக் கதைகளும் நன்னெறிக் கதைகளும் சொன்னார்கள். ஆனால் என் எட்டு வயதுப் பேரன் தீபாவளி பட்சணங்களைகூட அலட்சியம் செய்துவிட்டு எதையோ படித்துக் கொண்டிருந்தான். அவனைச் சுற்றி மற்றப் பேரன் பேத்திகள் கூட்டம்! கடைசியில் அருகில் போய் என்னடா என்று பார்த்தால், கண்ணன் தீபாவளி மலர்! உண்மையாகச் சொல்கிறேன். அதைக் கையில் வாங்கிக்கொண்டதும் அட்டைப் படமே என்னைக் கவர்ந்தது. மெதுவாக அதைப் புரட்டியதும் ராஜாஜியைச் சந்தித்தேன்; அறிவுரைகளை அவர் வாயாலேயே கேட்டேன். பின்பு பக்கம் பக்கமாகப் புரட்ட ஆரம்பித்ததும் 'இது போன்ற ஒரு பத்திரிகை நம் காலத்தில் இல்லையே? இப்பொழுது வயதாகி விட்டதே' என்று கவலையடைந்தேன். ஆனால் உடனே இப்பொழுது குழந்தையாக மாறிவிட்டால் என்ன என்ற யோசனை உதித்தது.

எல்லாக் கதை, கட்டுரைகளையும் படித்தேன். இந்தக் குழந்தைகளுக்காக இவ்வளவு அருமையான தீபாவளி மலரை வெளியிட்டிருக்கிறீர்களே! 'கண்ணன்' வளர்ச்சிக்கு என் ஆசிகள்.

சங்கரசுப்பா நாயுடு, ஆலப்புழை.

போட்டா போட்டி!

அன்புடைய ஆசிரியருக்கு,

நமஸ்காரம். கையில் மத்தாப்புடன் உல்லாசமாக வாசலில் சென்றேன். அந்தச் சமயத்தில் போஸ்ட்மேன் ஒரு வஸ்துவைக் கொடுத்தான். அடடா, என்ன போட்டி போங்கள்! வாசலுக்கு வந்து கொண்டிருந்த அப்பா முதலில், அதை இங்கே கொண்டு வா, பார்க்கலாம். நீ மத்தாப்பு, வெடி எல்லாம் வெடித்துவிட்டுப் படிக்கலாம்' என்று வாங்கிக்கொண்டார். அதற்குள் அம்மா ஓடி வந்து, "இங்கே கொடுங்கள், சற்று அட்டையை மட்டும் பார்த்துவிட்டுத் தருகிறேன்" என்று அப்பாவிடமிருந்து பிடுங்கிக்கொண்டாள். உடனே இது அக்கா, அண்ணா, தம்பி எல்லாருக்கும் தெரிந்து, 'எனக்கு, எனக்கு" என்று போட்டி போட ஆரம்பித்து விட்டார்கள். அதிகச் செல்லமும் பலசாலியுமான அண்ணாதான் முதலில் எல்லாவற்றையும் படித்தான். அடேயப்பா, எத்தனை கிராக்கி!

பேரனைச் சுமக்கும் நேரு, ராஜன் பாபு, ஸர் எஸ். ராதா கிருஷ்ணன், ஜெனரல் கரியப்பா. அபாரமான, அபூர்வமான படங்கள். கதைகள், கட்டுரைகள், கவிதைகள் எல்லாம் அபாரம். ராதா-கிருஷ்ணன் படத்தை என் தகப்பனாரே ஒரு நாள் பூராவும் வெட்டி ஒட்டிக் கொடுத்திருக்கிறார் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன். இவ்வளவு அருமையான மலரைத் தயாரித்து எங்களை மகிழ்வித்த உங்களுக்கு அநேக கோடி வணக்கங்கள்..நமஸ்தே!

எம். பத்மா (P. 65), மேச்சேரி.

கண்ணன் ஆசிரியர் அவர்கட்கு,

நமஸ்காரம். ஜிலு ஜிலுப்பான மூவர்ண அட்டையுடனும் ராஜாஜியின் ஆசிச் செய்தியுடனும், சுமார் 40 விஷயதானங்களைக் கொண்டதும், குறைந்த விலையில் குழந்தைகளுக்குரிய விஷயங்களுடன் கூடியதும், எல்லாவற்றிற்கும் மேலானதாகத் திகழும் 'ராதா கிருஷ்ணன்' விளையாட்டுடன் கூடிய 'கண்ணன்' தீபாவளி மலர், தீபாவளியில் சுடும் பட்டாசைப் போல் அல்லாது, ஏற்றி வைத்த தீபஜோதி போல் இன்றும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

(அப்பாடா! இனிமேல் மூச்சுவிடலாம்! ஆ-ர்.)

எல். கிருஷ்ணமூர்த்தி, தஞ்சாவூர்.

ப	ம்	ய	ரு
ரு	த	கா	ரி
த	து	த	சி

விடை; பதருத காரியம் சிதருது.

கே. சந்திரமௌளி, சென்னை-4.

* * * *

எட்டுத் துண்டுகள்



(4) படத்தில் காட்டியபடி தாறுமாறாக எட்டுத் துண்டுத் துணிகள் இருந்தன. பாபு வந்தான்; அந்த எட்டுத் துணிகளையும் நூதன முறையில் இணைத்து ஜம்மென்று வட்டவடிவமாகச் சேர்த்துத் தைத்துவிட்டான். உங்களால் அவன் இணைத்தபடி செய்ய முடியுமா பாருங்கள்!

(விடை: கடைசிப் பக்கத்தில்)

* * *

விடுகதை

வெள்ளி மலையில் விதை யூன்றி
விராலி மலையில் கொடி படர்ந்து
தஞ்சாவூரில் பிஞ்சு விட்டுத்
தலைவாசலில் காய் பறித்தேன்.

விடை: பூசணிக்காய்.

K.J.V. விடுகதைப் புதையல்.

* * *

கிளைக்கழக விழாக்கள்

மதுரை, கண்ணன் கிளைக் கழகத்தின் சார்பில் பாரதி விழாவை வெகு அமர்க்களமாகக் கொண்டாடினார்கள். ஸ்ரீ K. S. சுவாமிநாதன் அவர்கள் தலைமை வகித்தார். போட்டிகளில் வெற்றி பெற்ற பதினொரு மாணவ-மாணவிகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

காரியதரிசி, கிளைக் கழகம், மதுரை.

திருத்தருப்பூண்டியில் உள்ள பெண் அங்கத்தினர்கள் தங்கள் கிளைக் கழக ஆரம்பவிழாவை விமரிசையாகக் கொண்டாடினார்கள். உபதலைவர், செயலாளர் எல்லாரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கல்கத்தா கண்ணன் கிளைக் கழகக் குழந்தைகள் (பெண்கள்) ஆண்டு விழாவை ஸ்ரீ ப நா. தியாகராஜன் தலைமையில் நாஷனல் ஹைஸ்கூலில் கொண்டாடினார்கள்.

மயிலை கண்ணன் கிளைக் கழக அங்கத்தினர்கள் (பெண்கள்) ஆண்டு விழாவை 17-10-52 அன்று ஸ்ரீ அழ. வள்ளியப்பா தலைமை கொண்டாடினார்கள்.

—எஸ். ஜெயலக்ஷ்மி, உபதலைவி.

* * * *

எட்டுத் துண்டுகள்: விடை



* * * *

கண்ணன் பத்திரிகையின் சார்பில் செப்டம்பர் மாதம் நடைபெற்ற பாரதி விழாப் பரிசுப் போட்டியில்

பேனாப் பரிசு பெற்ற
T. V. சீனிவாசன்

குங்குமச்சிமிழ் பரிசு பெற்ற
பிரேமாவதி

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் கிளைக் கழகம்

22. பண்டாரவளை: சிலோன்
- உபதலைவர்: A. சுப்பையா
- பொருளாளர்: S. சண்முகம்
- செயலாளர்: K. நடராசா
- வாசகசாலை நிர்வாகி: S. N. அரச ரத்தினம்

பதினைந்து அங்கத்தினர்கள் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

23. ம. கல்லுப்பட்டி
- உபதலைவர்: A. பொன்னுசாமி
- பொருளாளர்: M. தங்கவேல்
- செயலாளர்: S. கந்தையா
- பத்திரிகைக் குழுவினர்: S. ராமன், A. சின்னசாமி, K. சரோஜா

செயற்குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது. 'வெண்ணிலா' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் தீபாவளி முதல் ஆரம்பித்திருக்கிறார்கள்.

24. வலங்கைமான்
- உபதலைவர்: பொருளாளர்: A. தாஜுதீன்
- செயலாளர்: A. கோவிந்தசாமி
- வாசகசாலை நிர்வாகி: P. சம்பந்தமூர்த்தி

20 பேர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

25. சைதாப்பேட்டை
- உபதலைவர்: K. P. ராஜகோபால்
- பொருளாளர்: R. ராமகிருஷ்ணன்
- செயலாளர்: R. சங்கரன்

பத்துப்பேர் கொண்ட செயற்குழுவும் 'தாமரை' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

26. திருச்சிராப்பள்ளி-II
- உபதலைவர்: P. சொக்கலிங்கம்
- பொருளாளர்: K. வேணுகோபால்
- செயலாளர்: பால்ராஜ் டேவிட்
- பத்திரிகை ஆசிரியர்: P. சொக்கலிங்கம்

பத்துப்பேர் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டிருக்கிறது. 'வெண்ணிலா' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

27. காரைக்குடி
- உபதலைவர்: T. N. ராமமூர்த்தி
- பொருளாளர்: T. N. ராமகிருஷ்ணன்
- செயலாளர்: R. நியாஸ் அகமத்
- வாசகசாலை நிர்வாகி: S. செல்லப்பன்

பதினான்கு அங்கத்தினர்கள் அடங்கிய செயற்குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

28. கோமளூர்
- உபதலைவர்: A. S. சுப்பையன்
- பொருளாளர்: S. கிருஷ்ணன்
- செயலாளர்: A. S. பழனிசாமி
- வாசகசாலை நிர்வாகி: R. C. சுப்பையன்

பத்து அங்கத்தினர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

REG. No. M. 5542

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

புதிய கண்ணன் வெளியீடுகள்

ஜக்கு

'பட்டணம் போகப்போகிறேன்' என்று எஞ்சின் டிரைவரின் உதவியால் ஒரு நாள் பட்டணத்துக்கே போய்விடுகிறான் ஜக்கு. எங்கே பார்த்தாலும், 'ஜக்கு, ஜக்கு' என்று அவனைப் பற்றியே பேச்சு! ஆனால் அவனை யாரோ தினம் டெலிபோனில் கூப்பிட்டு மிரட்டுகிறார்கள். படிக்கும்போது நமக்கும் அந்த ஆள் யாரென்று துடிதுடிப்பாகவே இருக்கிறது. எப்படியோ ஜக்கு சமாளித்துக் கண்டுபிடிக்கிறான்—சுவாரஸ்யமான சம்பவங்கள். விறுவிறுப்பான சம்பாஷணைகள். அழகான படங்கள்.

விலை 8 அணா

குளிகைத் தீவு

அருமையான சித்திரக் கதை. இளவரசன் நாகநந்தன் குளிகைத் தீவுக்குச் செல்கிறான். அவனை ஆபத்துக்கள் சூழ்ந்து கொள்கின்றன. மந்திரத் தீவின் இளவரசி அவனைப் பெண்ணாகவே மாற்றி விடுகிறாள். ஆயினும் நாகநந்தன் வெற்றி மாலை சூடித் திரும்புகிறான். கண்ணைக் கவரும் அழகான சித்திரங்கள்.

விலை 4 அணா

சின்னராஜா

படிக்க மனமில்லாமல் வேட்டையாடுவதில் விருப்பமுள்ளவனாக இருக்கிறான் சின்ன ராஜா. அதன் விளைவாக அவன் தந்தையின் அரசுக்கே ஆபத்துச் சூழ்கிறது. கடைசியில் அவன் தன் தவற்றை உணர்கிறான். வீரமும் அறிவும் பெற்றுக் கீர்த்தி யடைகிறான். சுவாரஸ்யம் மிகுந்த கதை.

விலை 12 அணா

புத்தக வியாபாரிகளுக்கும் கண்ணன் அங்கத்தினர்களுக்கும் கமிஷன் உண்டு. எல்லா ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும்.

விவரங்களுக்கு:

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★